வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 03 | 01.09.2022 வியாழக்கிழமை | இதழ் : 268 | பக்கங்கள் : 16






ஆளும் பொதுஜன பெரமுன கட்சியை விட்டு சுயாதீனமாக செயல்படுவதாக அறிவித்து எதிர்க்கட்சி வரிசைக்கு வந்த டலஸ் அழகப்பெருமவை எதிர்க்கட்சி தலைவர் சஜித் வரவேற்கிறார். அருகே விமல் வீரவன்ஸ எம். பி.

## உச்சத்தில் பணவீக்கம்!

கொழும்பு, செப். 01

நாட்டின் பணவீக்கம் கடந்த ஒகஸ்ட் மாதம் 64.3 வீதமாகப் பதிவானதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஜூலை மாதத்தில் 60.8 வீதமாகக்

15

## டலஸ் அணி வெளியேற்றத்தால் பெரமுனவுக்கு தாக்கம் இல்லை!

### அடித்துக் கூறுகின்றார் எஸ்.பி.

கொழும்பு, செப். 01

"டலஸ் அழகப்பெரும, ஜி.எல். பீரிஸ் உள்ளிட்ட 13 எம்.பிக்கள் வெளியேறியிருந்தாலும், அதனால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு எவ்வித தாக்கமும் ஏற்படாது." - என்று பாராளுமன்ற எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"எதிரணி பக்கம் சென்றவர்களில் தேசியப்பட்டியல் ஊடாக தெரிவானவர்களே அதிகம், அவர்களின் வெளியேற்றத்தால் கட்

15

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்துங்கள்!

## மனித உரிமை நாடுகளை வலியுறுத்தி தமிழர் தரப்பு கடிதம்!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 01

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ஐ. சி. சி) இலங்கையை பாரப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ. நா.) பாதுகாப்பு சபையை தூண்டுமாறு வலியுறுத்தி மனித உரிமைகள் பேரவையின் இணைத் தலைமை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு தமிழ்த் தரப்புகள் ஒன்றாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கடிதத்தில், ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புகள் எனப் பல தரப்பினர் கையொப்பமிட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில், தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வந்த பிரேரணைகளை

15

## மனித உரிமைகள் பேரவை: இணைத் தலைமை நாடுகளுக்கு தமிழ் கட்சிகள், அமைப்புகள் கடிதம்!

யாழ்ப்பாணம், செப். 01

13 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அட்டூழிய குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை அடைவதற்கான வலுவான தீர்மானத்தை 51ஆவது கூட்டத் தொடரில் முன்வைக்குமாறு வலியுறுத்தி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இணைத் தலைமை வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு தமிழ் தேசிய கட்சிகள், தமிழ் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்

15

## மரண தண்டனை நிறைவேற்றப்படாது!

### ஜனாதிபதி உயர்நீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, செப். 01

மரண தண்டனையை நிறைவேற்றத் தான் கையொப்பமிடப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சட்டமா அதிபர் ஊடாக உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட போதைப் பொருள் தொடர்பான குற்றவாளிகள் நால்வருக்கு 2019ஆம் ஆண்டு தண்டனையை நிறை

15

## 20 கோடி டொலர்கள் ஆசிய வங்கி வழங்கும்!

கொழும்பு, செப். 01

இலங்கைக்கு 20 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 7 ஆயிரத்து 90 கோடி ரூபாய் அவசர நிதி உதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் நிதியை மீள் திட்டமிடல் மூலம் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்

15

## திருமலை - இந்தியா இடையே எரிசக்தி குழாய் அமைக்க திட்டம்!

### மிலிந்த மொறகொட தகவல்

புதுடில்லி, செப். 01

திருகோணமலையில் இருந்து இந்தியாவுக்கு எரிசக்தி குழாய் அமைக்கும் திட்டம் தொடர்பில் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை மண்ணையோ அல்லது கடல் பிராந்தியத்தையோ இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலாக பயன்படுத்தப்படுவதை இலங்கை அனுமதிக்காது என்று- இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட

15

### உடைந்தது 'மொட்டு' கட்சி:

## பீரிஸ், டலஸ் உட்பட 13 எம். பிக்கள் பெரமுனவிலிருந்து வெளியேறினர்!

கொழும்பு, செப். 01

அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முதல் சுயாதீனமாக செயல்படுவதாக அறிவித்துள்ளனர். அத்துடன், அவர்கள் எதிர்க்கட்சியின் வரிசையிலும் நேற்று அமர்ந்தனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, ஜனாதிபதி தெரிவில் எதிர்த்துப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும

15

## இலங்கைக்கு கடன் வழங்க நாணய நிதியம் இணக்கம்?

### உத்தியோகபூர்வ தகவல் இன்று வெளியாகும்

கொழும்பு, செப். 01

இலங்கைக்கு அவசர கடன் உதவிகளை வழங்கும் ஆரம்ப உடன்படிக்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இணக்கம் வெளியிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பிலான உத்தியோகப்பூர்வ அறிவிப்பு இன்று வியாழக்கிழமை வெளியிடப்படலாம் என்றும் கூறப்பட்டது.

மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்த்துப் போரிடும் இலங்கை, அதிலிருந்து மீள சர்வதேச நாணய நிதியத்திடம்

15

## இப்படியும் நடக்கிறது...!

இந்த நாடு இன்று இப்படியொரு பொருளாதார நெருக்கடியில் இருப்பதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும், அடிப்படையில் ஒரு பிரச்னைதான்.

ஊழல்.

இன்று நாட்டின் டொலர் கையிருப்பு குறைந்ததற்கு என்ன காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அத்தியாவசிய பொருட்களை, எரிபொருளில் இருந்து எரிவாயு, சீனி, கிழங்கு, சமையல் எண்ணெய் என்று அனைத்துமே வெளிநாட்டிலிருந்துதான் வரவேண்டும் என்றால் அவற்றை கொண்டுவருவதற்கு டொலர்கள் தேவை.

அது எந்தெந்த வழிகளில் நமக்கு வருகின்றதோ அவை தடைப்படும்போது சிக்கல் ஏற்படுவது சகஜமானதுதான். ஆனால், சுற்றிவர கடலால் சூழப்பட்ட நமது நாட்டில் காற்றும், அதேவேளை வெயிலும் தாராளமாகக் கிடைக்கின்றது. இவை இரண்டையும் கொண்டு மின்சாரத்தை தயாரிக்கத் தொடங்கியிருந்தால் எமது மின் தேவைக்கு பெரும்பகுதியை அவை ஈடுசெய்திருக்கும்.

ஆனால் நாமோ, டீசலை பயன்படுத்தி ஜெனரேட்டர்கள் மூலமே மின்சாரத்தை உற்பத்திசெய்து பாவித்துக் கொண்டிருக்கின்றோம் என்பது எவ்வளவு கொடுமையான செய்தி.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் டீசல் தேவை, அந்த டீசலை கொண்டுவருவதற்கும் டொலர் தேவை.

இந்த டீசலுக்காக அதாவது, மின் உற்பத்தியை செய்யும் டீசலுக்காக செலவிடும் டொலரைக் கொண்டு, இலங்கையிலுள்ள ஒவ்வொருவரின் வீட்டுக் கூரைகளிலும் சூரிய சக்தியில் மின் உற்பத்தியை செய்து அதனையே உங்கள் தேவைக்கு பயன்படுத்துங்கள் என்று ஒவ்வொரு வீட்டுக்கும் இலவசமாகவே சூரிய சக்தி மின்உற்பத்தி சாதனங்களைக் கொடுத்திருந்தால், இன்று நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சிக்கல் ஒன்று இருந்திருக்காது.

ஏன் இவ்வாறு செய்யவில்லை என்று யாராவது கேட்டால் பதில் மிகச் சுலபமனது.

- ஊழல்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு குடியிருப்புக்கும் அவர்களின் மின்தேவையை அவர்களே ஈடுசெய்வதுபோல சூரிய சக்தி மின் உற்பத்தி சாதனங்களை கொடுத்திருந்தால், வாங்குகின்ற ஒவ்வொரு லீற்றர் டீசலிலும் கிடைக்கும் தரகுத் தொகை கிடைக்காமல் போய்விடும் என்பது சம்பந்தப்பட்டவர்களின் கவலை. அதனால்தான் இதுபோன்ற திட்டங்களைப் பற்றி யாரும் கண்டுகொள்வில்லை.

நாடு இத்தனை நெருக்கடிக்குள் இருக்கும்போதும் இப்படியொரு செய்தியை படிக்க முடிகின்றது என்றால், நமது நாடு எந்த நிலையில் இருக்கின்றது என்பதை நீங்கள் ஊகித்துக்கொள்ளலாம்.

நேற்றைய "ஈழநாடு"வில் வெளிவந்த செய்தி இது.

"தரமற்ற மசகு எண்ணெய் இறக்குமதி காரணமாக எரிபொருள் உற்பத்தியானது 22 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோரல் எனர்ஜீ எனப்படும் நிறுவனத்தின் ஊடாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் தரம் தொடர்பில் சர்ச்சை நிலை உருவாகியுள்ளது.

இதனால் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பெற்றோல் மற்றும் டீசல் உற்பத்தியானது வீழ்ச்சியடைந்துள்ளது.

டுபாயில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த நிறுவனத்திடமிருந்து மசகு எண்ணெய் அல்லது எரிபொருள் கொள்வனவு செய்யவேண்டாம் என பெற்றோலிய கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் விடுத்துவரும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது."

இதுவே அந்த செய்தி. ஏற்கனவே எரிபொருள் கொள்வனவின்போது குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிற்கு "கொமிஷன்" வழங்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், இப்போது தரமற்ற மசகு எண்ணெயை இறக்குமதி செய்திருப்பதாக செய்திகள் வெளியாவது ஒரு விடயத்தை மாத்திரம் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

இந்த நாடு என்னதான் நடந்தாலும் அது திருந்துவதற்கு சந்தர்ப்பம் இல்லை என்பதே அந்த விடயம்.

அந்த விடயம் ஒரு சஞ்சிகையில் படித்த துணுக்கு ஒன்றைத்தான் எமக்கு ஞாபகப்படுத்துகின்றது.

ஒரு கடையில் எழுதி வைக்கப்பட்டிருந்த விளம்பரம் இது:

"நாங்கள் விற்ற எந்தப் பொருளும் சரியில்லை என்றால் எங்களிடம் திருப்பித் தந்து விடலாம். அதற்குப் பதிலாக அதேதரமுள்ள பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்."

இதுதான் அந்த கடையில் எழுதி வைக்கப்பட்டிருந்த விளம்பரம்.

எங்கள் நாட்டில், ஒருவர் ஊழல் செய்கிறார் என்று நாங்கள் அவரை பதவியிலிருந்து வெளியேற்றினாலும் அதே தரமுடைய ஒருவரைத்தான் மீண்டும் அந்தப் பதவிக்கு நியமிப்போம் என்கிறார்களோ?

**- ஊர்க்குருவி**

# நாட்டின் நிதிப் பேரழிவுக்கு காரணம் ராஜபக்ஷக்களின் ஊழல் ஆட்சியே!

கொழும்பு, செப். 01

இலங்கையின் நிதிப் பேரழிவு இரண்டு ராஜபக்ஷ ஆட்சிகளின் ஊழலின் விளைவு என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

மேலும் அவர்களை அறகலய விரட்டியடித்தது மெய்சிலிர்க்க வைத்துள்ளதாகவும் ராஜபக்ஷக்களை நம்பியிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

இந்தியாவின் தி இந்து ஆங்கில நாளிதழுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில், தற்போது நாம் திவாலாகி விட்டோம் என்பது ராஜபக்ஷவின் குடும்பம் மற்றும் அவர்களது கூட்டாளிகளின் ஊழலால் மட்டுமே. அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச ஊழியர்களுக்கு மேலதிகமாக பூர்வீக அதிகாரங்களில் உள்ளவர்கள் என அனைவரையும் அவர்கள் மோசடி செய்பவர்களாக மாற்றினர். ஊழல் உச்சத்தில் இருந்து, எல்லா இடங்களிலும் பரவியது.

எங்கள் அமைப்புமுறை வீழ்ச்சியடைந்துள்ள போது வேண்டுமென்றே அழிக்கப்பட்டுள்ள போது நீங்கள் எப்படி நிலைமையை மாற்றுவீர்கள்? தேர்தலுக்குச் சென்றாலும், 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே மாதிரியான மோசடியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதனை மாற்றுவதற்கான ஒரே வழி ஒரு சமூக-அரசியல் எழுச்சி, ஒரு புரட்சி.

அறகலய உண்மையில் சிலிர்ப்பானது மற்றும் ஆக்கப்பூர்வமானது என்னவெனில், அவர்களிடம் ஓர் இலக்கு மற்றும் முன்னோக்கு இருந்தது. அவர்கள் வெறுமனே ராஜபக்ஷக்களை விரட்டியடிக்க வேண்டும் என்று கூறவில்லை. நேர்மையான அதிகாரிகள், தெளிவான நிர்வாகத்தை நாங்கள் விரும்புகிறோம் என்று அவர்கள் கூறினர். அவர்கள் ஒரு 10 அம்ச திட்டத்தை வெளியிட்டனர், அந்த திட்டத்தின் இயல்பான போக்கு அற்புதமாக இருந்தது என தெரிவித்துள்ளார்.

மேலும் , சர்வதேச சமூகத்தை அடிப்படையாக கொண்ட கடினமான முடிவுகளை இலங்கை எடுக்கவேண்டிய நிலை காணப்படலாம் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி குறிப்பாக வெளி உதவி குறித்த பேச்சுவார்த்தைகளின் போது இந்த நிலை காணப்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மகிழ்ச்சியடையாததால் இந்தியா விலகியிருந்து காத்திருந்திருக்க கூடிய நிலை காணப்பட்ட போதிலும் இந்தியா எங்களுக்கு உதவ முன்வந்தது உதவிகளை வழங்கியது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷக்கள் மீண்டும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக உள்ளன. ராஜபக்ஷக்கள் என்னை மிகவும் பயங்கரமான முறைகள் - மிகவும் இழிவான விதத்தில் துன்புறுத்தினார்கள் - எப்படியிருந்தாலும் இந்த விடயங்கள் எனது தனிப்பட்ட அரசியல் முன்னுரிமைகளை பாதிப்பதில்லை. அவர்கள் நாட்டுக்கு செய்த விடயங்களுக்காக நான் அவர்களை வெறுக்கின்றேன்.

இதன் காரணமாக அறகலயவால் அவர்களை அமைதியான முறையில் துரத்த முடிந்தமை குறித்து நான் நிம்மதியடைந்துள்ளேன் - என்றார். (ஐ)

## கைதான 28 மாணவர்களும் பிணையில் செல்ல அனுமதி!

கொழும்பு, செப். 01

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது, கைதுசெய்யப்பட்ட 28 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அடக்குமுறையை நிறுத்துவோம் என்ற தொனிப்பொருளில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், பல்வேறு தொழில்சங்கங்களும், சமுக அமைப்புகளும் பங்கேற்றிருந்தன.

இதன்போது, கைதுசெய்யப்பட்ட 28 பேரும், நேற்று மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## 8 - 12ஆம் திகதிவரை பாடசாலை விடுமுறை

கொழும்பு, செப். 01

பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை விடுமுறை தொடர்பான அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதன்படி இரண்டாம் தவணைக்கான விடுமுறை செப்ரெம்பர் 8 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் செப்ரெம்பர் 13, 2022 இல் தொடங்கும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## நீர்கொழும்பு நீதிமன்றம் முன்பாக துப்பாக்கி சூடு

கொழும்பு, செப். 01

நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்று துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## இரத்தினபுரி மாவட்டத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!

இரத்தினபுரி, செப். 01

இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்லை, நிவித்திகலை, இரத்தினபுரி, குருவிட்ட, அயகம மற்றும் எலபாத்தை பிரதேச செயலக பிரிவுகளின் தாழ்நிலப் பகுதிகளில் அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் வெள்ளம் ஏற்படும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுகங்கையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதையடுத்து இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் மற்றும் அந்தப் பகுதிகள் ஊடாக பயணிக்கும் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டுமென நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

காலி, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு, கண்டி, கேகாலை மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

மத்திய மலைநாட்டுப் பகுதியிலும் ஆறுகளுக்கு அண்மித்து வசிப்போர் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பலத்த காற்றால் மரங்கள் முறிந்து வீழும் அபாயமுள்ளதால், அது குறித்தும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
01.09.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஜப்பானின் தலையீடு?

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் ஒரு நீண்ட உறவுண்டு. உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னணியில் கொழும்புக்கும் சீனாவுக்குமான (பீஜிங்) உறவு வலுவடைந்தது. அதுவரையில் ஜப்பானே இலங்கைக்கு கடனுதவி வழங்குவதில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக வந்தமையைத் தொடர்ந்து 1978இலிருந்து ஜப்பானே வெளிநாட்டு கடன்களை வழங்குவதில் முதன்மையான பங்காளி நாடாக செயல்பட்டு வந்தது.

ஜப்பான் மேற்குலகின் - பிரதானமாக அமெரிக்காவின் முதன்மையான ஆசிய பங்காளியாகும் - அதேவேளை முதன்மையான சீன எதிர்ப்பு நாடாகும். சீன எதிர்ப்பின் அடிப்படையில்தான் ஜப்பான் மேற்குலகின் நட்பு நாடாக இருக்கின்றது. சீனாவுக்கும் ஜப்பானுக்குமான முரண்பாடுகள் வரலாற்று ரீதியானவை. சீனாவின் அண்மைய எழுச்சி முக்கியமாக, தென்சீனக் கடலில் சீன கடற்படையின் விரிவாக்கம் தொடர்பில் ஜப்பான் கலக்கமடைந்திருக்கின்றது. இந்தப் பின்புலத்தில்தான் இந்தோ - பசுபிக் மூலோபாயம் ஒன்றை ஜப்பான் முன்மொழிந்தது. அண்மையில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி, உயிரிழந்த ஜப்பானின் முனனாள் பிரதமர் ஷின்சோ அபேயே (Shinzo Abe) இந்தோ - பசுபிக் மூலோபாயம் தொடர்பில் முதலில் பேசியவராவார்.

இந்தோ - பசுபிக் என்னும் அடிப்படையில் மேற்குலகமும் ஆசியாவும் ஒரு புள்ளியில் சந்திக்க வேண்டும் என்னும் முன்மொழிவை 2007இல் அவரின் இந்திய விஜயத்தின்போதே முதன்முதலாக வலியுறுத்தியிருந்தார். இந்தப் பின்னணியில்தான் இந்தோ - பசுபிக் மூலோபாயத்தை அமெரிக்கா கையிலெடுத்தது. அதுவரையில், ஆசிய - பசுபிக் என்னும் நிலையிலிருந்த அமெரிக்க அணுகுமுறை மாற்றமடைந்தது. ஆசிய விவகாரங்களை கவனிக்கும் அமெரிக்காவின் பிரதான இராணுவ தளமான ஆசிய - பசுபிக் கட்டளை பீடம், 'இந்தோ - பசுபிக் கட்டளைப்பீடம்' என்று பெயர் மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்தே 'குவாட்' என்னும் அமெரிக்க - ஆசிய இராணுவ ஊடாட்டத்துக்கான நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. குவாட் விவகாரத்தை சீனா இராணுவ நோக்கிலேயே விமர்சித்து வருகின்றது. நேட்டோ போன்ற ஒன்றுதான் இதுவென்று சீனா தொடர்ந்தும் விமர்சித்து வருகின்றது.

இவ்வாறான பின்னணியைக் கொண்டிருக்கும் ஜப்பானின் உதவியை இலங்கை மீண்டும் கோரியிருக்கின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் நோக்கில் நாடுகளின் உதவியைப் பெறுவதற்கான கொடையாளர் மகாநாடு ஒன்றை கூட்டுவதற்கு ஜப்பானின் உதவியை ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார். இதில், இணைப்பாளராக செயல்படுவதற்கு தாம் தயாராக இருக்கிறார் என்று ஜப்பானின் நிதியமைச்சர் சூனிச்சி சுசூகி (Shunichi Suzuki) தற்போது அறிவித்திருக்கின்றார்.

ஜப்பான் சமாதான முன்னெடுப்புக்களின்போதும் பிரதான பங்கை வகித்திருந்தது. ஜப்பானின் பங்களிப்புக்கள் எப்போதும் அமைதியாக இருப்பதே வழக்கம். அப்போது விடயங்களை கையாள்வதற்காக யசூசி அகாசி என்பவரை சிறப்பு தூதுவராக ஜப்பான் நியமித்திருந்தது. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமான பேச்சை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்கு ஜப்பான் பல்வேறு பங்களிப்புக்களை வழங்கியிருந்தது. மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கலாம் என்னும் நிலைமை ஏற்பட்டபோதும் யசூசி அகாசி வன்னிக்கு சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சுப்பையா பரமு தமிழ்ச்செல்வனை சந்தித்து பல்வேறு அறிவுரைகளை வழங்கியிருந்தார்.

இன்றைய சூழலை தமிழர் தரப்புக்கள் எவ்வாறு நோக்கலாம் - நோக்க வேண்டும்? கொடை வழங்கும் நாடுகளின் மகாநாடு தொடர்பில் பேசப்படும் நிலையில் வடக்கு - கிழக்கின் பாதிப்புக்கள் தொடர்பிலும் அவை தனியாக நோக்கப்பட வேண்டும் என்னும் அடிப்படையிலும் ஒரு விசேட அறிக்கையொன்றை தயார் செய்து குறித்த குவாட் நாடுகளுக்கும் இதேபோன்று மேற்குலக நாடுகளுக்கும் வழங்க வேண்டும். இது தொடர்பில் தமிழ் கட்சிகள் துரிதமாக பணியாற்ற வேண்டும். தமிழர்கள் ஒரு தனியான தரப்பு என்பதை எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

# மிகைல் கோர்பச்சேவ்: சோவியத் ரஷ்யாவின் கடைசி தலைவர்!



சோவியத் ஒன்றியத்தில் நிலவிய கட்டுப்பாடுகளைத் தளர்த்தியவர், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்குமான பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவந்தவர், கம்யூனிஸ்ட் நாடுகளின் தொகுப்பை முன்னின்று நடத்திய சோவியத் ஒன்றியத்தின் கடைசி தலைவர் என்று வரலாற்றில் பல அடையாளங்கள் கொண்ட மிகைல் கோர்பச்சேவ் தனது 91வது வயதில் காலமானார்.

1985ம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் தலைமைப் பதவிக்கு வந்த இவர் நாட்டின் இரும்புத் திரை கட்டுப்பாடுகளை நீக்கி நாட்டை உலகுக்கு திறந்து விட்டார். உள்நாட்டிலும் பல சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தார். ஆனால், கடைசியில் சோவியத் ஒன்றியம் சிதைவதை இவரால் தடுக்க முடியவில்லை. ரஷ்யா, உக்ரைன் உள்ளிட்ட பல நாடுகள் சோவியத் ஒன்றியத்தின் சிதைவை அடுத்த தனித்தனி நாடுகளாக உரு வாயின.

மிகைல் கோர்பச்சேவ், வரலாற்றின் போக்கை மாற்றியவர் என்று கூறி ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரஸ் அஞ்சலி செலுத்தியுள்ளார். "மிகைல் கோர்பச்சேவ் இரக்கம் மிகுந்த அரசியல் தலைவர். அமைதிக்காக சோர்வின்றி பாடுபட்ட, பலமுனை உறவுகளுக்கு ஆதரவான, மிக உயர்ந்த தலைவர் ஒருவரை உலகம் இழந்துவிட்டது" என்று அவர் தமது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

கோர்பச்சேவ் மறைவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார் என்று ரஷ்ய செய்தி முகாமையான இன்டர்பேக்சிடம் தெரிவித்துள்ளார் அவரின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ்.

"நம்பகமான, மரியாதைக்குரிய தலைவர்," என்று அவரை ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வொன் டெர் லெயன் புகழ்ந்துரைத்துள்ளார்.

கோர்பச்சேவின் துணிச்சலையும், நம்பகத் தன்மையையும் எப்போதும் வியந்து வந்ததாகவும், சோவியத் சமூகத்தை அவர் திறந்து விட்டது, புடினின் ஆக்கிரமிப்புக் காலத்தில் எடுத்துக்காட்டாக உள்ளது என்றும் பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் பல தலைவர்கள் அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகிறார்கள்.

நீண்ட காலம் நீடித்த, தீவிர நோய் ஒன்றின் காரணமாக அவர் இறந்துவிட்டாரென மொஸ்கோவில் அவர் சேர்க்கப்பட்டிருந்த மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே அவரின் உடல் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. மருத்துவமனையில் சேருவதும், வீட்டுக்குத் திரும்புவதுமாக அவர் இருந்தார். சிறுநீரக கோளாறு ஒன்றுக்காக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக கடந்த ஜூன் மாதம் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், அவரின் மறைவுக்கான காரணம் தற்போது விவரிக்கப்படவில்லை.

1985ஆம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அதன் வழியாக நாட்டின் தலைவராகவும் ஆனவர் கோர்பச்சேவ்.

அப்போது அவரது வயது 54. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழுவான பொலிட் பீரோவின் இளம் உறுப்பினர் அவர். அவருக்கு முன்பு அந்தப் பொறுப்பில் சுமார் ஓராண்டு இருந்த கொன்ஸ்டைன்டின் செர்னென்கோ தமது 73வது வயதில் இறந்த நிலையில் இளம் தலைவரான இவர் பதவிக்கு வந்தார்.

கடுமையான கட்டுப்பாடுகளால் மூச்சுத் திணறிக்கொண்டிருந்த சோவியத் ஒன்றியத்தில் மக்கள் அரசாங்கத்தை விமர்சிக்க அனுமதிக்கும் "கிளாஸ்னாஸ்ட்" என்ற திட்டத்தை அறிமுகம் செய்தார். இந்த சொல்லுக்கு "வெளிப்படையாக" என்று பொருள். அதே நேரம் சோவியத் ஒன்றியத்தின் பல பகுதிகளில் தேசியவாத உணர்ச்சியைக் கிளறினார். இதன் பலனாக ஒன்றியம் சிதறியது.

அமெரிக்காவுடன் ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு உலக அமைதிக்கு பங்களித்தார். கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் சிலருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தபோது சோவியத் ஒன்றியத்தின் சார்பில் அவர் தலையீடு செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



செப்ரெம்பர் - 01 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 16
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சஷ்டி




**மேடம்**
தடைபட்ட செயல்கள் நடந்தேறும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள்.குடும்ப பிரச்னைகள் முடிவிற்கு வரும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.செயல்கள் நன்மையாகும்.

**இடபம்**
வேலை தேடுபவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். எதிரிகள் விலகிச் செல்வர். எதிர்பார்ப்பு நிறைவேறும். ஒரு பிரச்னை முடிவிற்கு வரும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்**
பணியில் ஏற்பட்ட சங்கடம் விலகும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும்.பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும். வியாபாரத்தில் உண்டான பிரச்னை விலகும். மறைமுகத் தொல்லை அகலும்.

**கடகம்**
அரசு விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை.திட்டமிட்ட வேலைகளை முடிப்பீர்கள். செயல்களில் கவனம் தேவை.எதிர்பார்ப்பு நிறைவேறும். தாய் வழி உறவுகளால் சங்கடம் வரலாம்.

**சிம்மம்**
செயல்கள் வெற்றியாகும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் உண்டாகும். எண்ணங்கள் நிறைவேறும். தடைகளை சரி செய்வீர்கள். ஆதாயம் கூடும். அரசு வழியிலான முயற்சி நிறைவேறும்.

**கன்னி**
பொன் பொருள்களை கையாள்வதில் கவனம் தேவை. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். மனக் குழப்பங்கள் விலகும்.

**துலாம்**
இழுபறியாக இருந்த வேலைகள் நிறைவேறும். குழப்பத்தில் இருந்து விடுபடுவீர்கள்.செலவு கட்டுப்படும். சுய ஆற்றலால் லாபத்தை ஈட்டுவீர்கள். மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள்.

**விருட்சிகம்**
விறுவிறுப்பாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். மதியத்திற்கு மேல் தடையை சந்திப்பீர்கள். விறுவிறுப்பாக செயல்பட்டு லாபம் காண்பீர்கள். மதியத்திற்கு மேல் நெருக்கடி ஏற்படலாம்.

**தனுசு**
வியாபாரத்தை விரிவு செய்து வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். எதிர்பாராத ஆதாயம் வரும். செயல்கள் வெற்றி பெறும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும்.

**மகரம்**
தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சங்கடங்கள் விலகும். பண வரவு தாராளமாகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். உங்களது தனித்தன்மை வெளிப்படும். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள்.

**கும்பம்**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். திட்டமிட்ட செயல்கள் நிறைவேறும். முயற்சித்தும் சங்கடத்தில் இருந்து மீள்வீர்கள். அறிவாற்றலால் புதிய வழிமுறைகளைக் காண்பீர்கள்.

**மீனம்**
தடுமாற்றம், சங்கடம் ஏற்படலாம். மதியம் வரை லாபம் இருந்தாலும், அதன்பின் நெருக்கடிகள் உண்டாகலாம்.எண்ணங்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மதியத்திற்கு மேல் தடுமாற்றம் வரலாம்.

# தலித்துக்கள் மீதான அதிகரிக்கும் தாக்குதல்களை தடுக்க வேண்டும்!

## திருமாவளவன் முதல்வரிடம் கோரிக்கை



*சென்னை, செப். 01*

*“தமிழகத்தில் அதிகரித்துவரும் தலித்துகள் மீதான தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்று முதல்வர் ஸ்டாலினுக்கு விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், “தமிழகத்தில் தலித் மக்கள்மீதான வன்கொடுமைகள் அதிகரித்திருப்பதாக தேசிய குற்ற ஆவண மையத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தெரிவிக்கிறது. கடந்த அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளர்களின் ஆதரவோடு சாதிய வன்கொடுமைகள் நடந்தன. தி. மு. க. ஆட்சியில் அந்த நிலை நீடிக்கக் கூடாது. முதல்வர் உறுதியோடு அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என வலியுறுத்துகிறோம்.*

*தமிழகத்தில் தலித் மக்களுக்கு எதிராக 2019 ஆம் ஆண்டில் 1,144 குற்றங்கள் நடந்திருந்தன. 2020ஆம் ஆண்டில் 1,274 வன்கொடுமைக் குற்றங்கள் நிகழ்ந்தன. 2021இல் தலித் மக்கள்மீதான வன்கொடுமை குற்றங்களின் எண்ணிக்கை 1377 ஆக உயர்ந்திருக்கிறது. 2021 இல் தமிழகத்தில் 53 தலித்துகள் படுகொலை செய்யப்பட்டனர். 61 தலித்துகளைக் கொலை செய்ய முயற்சி நடந்துள்ளது. ஒட்டு மொத்த இந்தியாவில் தலித் படுகொலைகளில் 2020ஆம் ஆண்டு 5ஆவது இடத்தை வகித்த தமிழகம் இப்போது 7ஆவது இடத்தில் இருக்கிறது.*

*தலித் பெண்கள் மீதான தாக்குதல், துன்புறுத்தல், கண்ணியக் குறைவாக நடத்துதல் போன்ற குற்றங்களை விடவும் தலித் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்படுவது தமிழ்நாட்டில் மிக அதிகமாக இருக்கிறது. தமிழகத்தில் 2020 ஆம் ஆண்டில் 123 தலித் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாக என்சிஆர்பி அறிக்கை தெரிவித்தது. அதில் 88 பேர் 18 வயதுக்கும் குறைவான சிறுமியர். தலித் சிறுமியர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களில் இந்தியாவிலேயே 5ஆவது இடத்தில் தமிழகம் இருந்தது.*

*தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமை வழக்குகளை விசாரிப்பதில் தமிழ்நாடு பொலிஸார் மெத்தனமாக இருப்பது என். சி. ஆர். பி. அறிக்கையில் தெரியவந்துள்ளது. பொலிஸாரின் மெத்தனமான போக்கே வன்கொடுமைகள் அதிகரிப்பதற்கு காரணம் என்பதை என். சி. ஆர். பி அறிக்கை புலப்படுத்துகிறது. இதை தமிழக முதல்வர் கவனத்தில் கொண்டு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தலித் மக்கள் மீதான வன்கொடுமைகளே இல்லாத மாநிலம் என்ற பெருமையைத் தமிழகத்திற்கு உருவாக்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்” என்றுள்ளது. (ஐ)*

# எட்டு வழிச்சாலை திட்டம் குறித்து தி. மு. கவின் நிலைப்பாடு என்ன?

## அண்ணாமலை கேள்வி

*சென்னை, செப். 01*

*“பரந்தூரில் விமான நிலையம் அமைக்க முடியாவிட்டால், அ. தி. து. க. அரசு ஆட்சியில் பரிந்துரைத்த இடத்தை தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும்” என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். மேலும், 8 வழிச் சாலை குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார்.*

*நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், “சேலத்தில் இருந்து சென்னை வரையிலான 8 வழித் திட்டத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன என்பதை தமிழக முதல்வர் மக்களுக்கு நேரடியாக விளக்க வேண்டும். திட்டம் குறித்து தற்போது அவர்களின் மனது மாறியிருக்கிறதா? மாறியிருந்தால் ஏன் மாறியிருக்கிறது? அப்படியிருந்தால் மத்திய அரசு கொண்டுவந்த நிறைய திட்டங்களை எதற்காக எதிர்த்தார்கள்? - இதுதொடர்பாக தமிழக முதல்வர் நேரடியான ஒரு விளக்கத்தை கொடுப்பார் என்று தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதனை முதல்வர் கொடுக்க வேண்டும்.*

*இதே பிரச்னை பரந்தூர் விமான நிலையத்துக்கும் உள்ளது. தி.மு.கவின் தேர்தல் அறிக்கையிலேயே சென்னைக்கு இரண்டாவதாக ஒரு விமான நிலையம் வேண்டும் என்று கூறியுள்ளனர். ஒரு மாநிலத்துக்கு நிறைய விமான நிலையங்கள் வேண்டும். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.*

*ஆளும் திமுக அரசின் திட்டமிடுதல் சரியாக இல்லாத காரணத்தால், மத்திய அரசு தயாராக இருக்கின்ற ஒரு திட்டம், கொடுக்க வேண்டிய திட்டத்துக்கு மறுபடியும் இவர்களாகவே தடையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அமைச்சர் சாதரணமாக கூறுகிறார், மூன்றரை மடங்கு இழப்பீடு வழங்க தயாராக இருக்கிறோம் என்று அரசின் கோரிக்கையை மக்கள் ஏற்கவில்லை. இதனை சரிசெய்ய வேண்டிய கடமை மாநில அரசுக்கு உண்டு. இதனை அரசு விரைந்து சரிசெய்து, மக்களின் அனைத்து கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்க வேண்டும் - என்றார். (ஐ)*



விநாயகர் சதுர்த்தி தினமான நேற்று சென்னை - கொளத்தூரில் 3600 செம்புகள் மற்றும் தேங்காய்கள் கொண்டு உருவாக்கப்பட்ட 40 அடி உயர் விநாயகர் சிலை...!

ஈழநாடு



# இடைக்கால பட்ஜெட் கண்துடைப்பு நாடகம்

## சஜித் அணி கருத்து

கொழும்பு, செப். 01

**வாக்குறுதிகளை வழங்கிய வரவு-செலவுத் திட்டமாகவே இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை பார்க்க முடிகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்ற கட்டடத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பெருமளவு



வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையில் இதை யதார்த்தமாக்க முடியுமா என்பதே கேள்வி.

நாடு தற்போதுள்ள நிலைமையில் பொருத்தமான வரவு செலவுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பினால் அவ்வாறு இல்லை என்றே கூற முடியும்.

அந்த வகையில் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் ஒரு கண் துடைப்பு என்றே குறிப்பிட முடியும்-என்றார். (அ)

## அரிசி, கோதுமை மா உள்ளிட்ட48 வகையான பொருட்களின் விற்பனை குறித்து நிபந்தனை

கொழும்பு, செப். 01

48 வகையான பொருட்களின் உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை தொடர்பில் பல நிபந்தனைகளை விதித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, வெளியிடப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்படவேண்டும் என்று அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் அல்லது எந்தவொரு நபரும் கோரும் பொருட்கள் தாமதமின்றி வழங்கப்படவேண்டும் என இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மூலப்பொருட்களின் சிக்கல் அல்லது பிற நியாயமான உற்பத்தி சிக்கல்கள் இல்லாவிட்டால், பொருட்களின் உற்பத்தியாளர்கள் அதிகபட்ச உற்பத்தி திறனை பராமரிக்கவேண்டும்.

அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் பற்றுச்சீட்டை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதுடன், பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விற்பனையாளரிடம் வைத்திருக்கவேண்டும் எனவும் நுகர்வோர் அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கைக்கு கோதுமை மா இறக்குமதி செய்வதில் சிக்கல்

கொழும்பு, செப். 01

கோதுமை மா ஏற்றுமதியை நிறுத்துவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளதால், இலங்கைக்கான கோதுமை மாவின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் வர்த்தக அமைச்சுக்கு தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக உலக நாடுகளுக்கு கோதுமை மா ஏற்றுமதி செய்வதை இந்தியா நிறுத்தியுள்ளது. தமது கோதுமை உற்பத்தியை பாதுகாப்பு இருப்புப் பகுதியாக பராமரிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது துருக்கியில் இருந்து மட்டுமே கோதுமை மாவை இலங்கை இறக்குமதி செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர் 60 தங்க பிஸ்கட்டுக்களுடன் சிக்கினார்!

கொழும்பு, செப். 01

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 16 கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையச் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 6.995 கிலோ கிராம் எடையுள்ள 60 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அதன் பெறுமதி 157 மில்லியன் ரூபா எனவும் விமான நிலைய சுங்கப் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் கட்டுநாயக்க விமான நிலைய வரி விலக்கு பெற்ற கடையில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட நபர் ஜா எல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் குறித்த நபரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்க பிஸ்கட்டுகள் 24 கரட் என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்கப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

## அரச நிறுவனங்கள் மக்களின் கடிதங்களுக்கு பதில் வழங்குவது குறித்து விசேட சுற்றறிக்கை

கொழும்பு, செப். 01

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கான பதில்களை அரச நிறுவனங்கள் வழங்குவது தொடர்பான சுற்றறிக்கையை அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே மாயாதுன்னவின் கையொப்பத்துடன் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது.

கோவிட்-19 தொற்று நிலைமை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக அரசாங்க நிறுவனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து கடமை கடிதங்களுக்கும் பதில் அனுப்பும்போது சம்பந்தப்பட்ட கடிதத்தின் கையொப்பத்துக்கு கீழே பொறுப்பான பணியாளர் அதிகாரியின் நேரடித் தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்படவேண்டும் எனவும் சுற்ற றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்று நிலைமை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக அரசாங்க நிறுவனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து கடமை கடிதங்களுக்கும் பதில் அனுப்பும்போது சம்பந்தப்பட்ட கடிதத்தின் கையொப்பத்திற்கு கீழே பொறுப்பான பணியாளர் அதிகாரியின் நேரடி தொலை பேசி இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் சுற்றறிக் கையில் குறிப்பிடப்பட்டுள் ளது. (அ)

## மன்னாரில் 11 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது!

மன்னார், செப். 01

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து சுமார் 11 கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளை இன்று புதன்கிழமை காலை இராணுவத்தினர் கைப்பற்றியதோடு,இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

இராணுவ புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த ஐஸ் ரக போதைப்பொருள் நேற்று புதன்கிழமை காலை சுமார் 6.50 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

கூலர் ரக வாகனத்தின் முன் இருக்கையில் சூட்சுமமான முறையில் பதுக்கி வைத்துக் கொண்டு செல்லப்பட்ட 10



பொதிகளைக் கொண்ட 10 கிலோ 400 கிராம் எடை கொண்ட ஐஸ் போதைப் பொருளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பெரிய கடை மற்றும் தலைமன்னார் கிராமம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேக நபர்கள் மீட்கப்பட்ட ஐஸ் போதைப் பொருட்களுடன் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (அ)

## விக்கிக்கு பைத்தியமாம்! சொல்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப். 01

புலிகளுக்காக குரல் கொடுக்கும் விக்னேஸ்வரன் பைத்தியக் காரனாகவே இருக்கவேண்டும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள்மீதான தடை நீக்கப்பட்டதுபோல, புலிகள் மீதான தடையும் நீக்கப்படவேண்டும் என விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளாரே என ஊடகவியலாளர் ஒருவர் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, பொன்சேகா இவ்வாறு காட்டமாகப் பதிலளித்தார்.

" புலிகளை மீண்டும் தாலாட்டுவதற்கு விக்னேஸ்வரன் முற்படுகின்றாரா, அவருக்கு வயதுபோய்விட்டது. நீதியரசர் பதவியை வகித்த ஒருவர் அவர். எதற்காக இப்படி கதைக்கின்றார். அவருக்கு பைத்தியமாக இருக்கவேண்டும். அவர் கூறும் வழியில் எமக்கு டொலர் தேவையில்லை." - எனவும் பொன்சேகா குறிப்பிட்டார். (அ)



# இடைக்கால பட்ஜெட் சிறந்தது!

## பாராட்டுகிறார் அமைச்சர் பந்துல



கொழும்பு, செப். 01

இலங்கை மிக மோசமான பொருளாதார நிலையை எதிர்நோக்கியுள்ள நிலையில் முன்வைக்கப்பட்டுள்ள சிறந்த வரவு - செலவுத் திட்டமாக இதனைப் பார்க்க முடிகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ரணில் அரசின் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரலாற்றில் நாடு பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்த முடியாத நிலை உள்ளபோதும் கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வரும் நிலையில் நாட்டைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையிலான வரவு - செலவுத் திட்டமாக இதனைக் குறிப்பிட முடியும்.

பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல், பொருளாதாரம், நிதி முகாமைத்துவம் போன்றவற்றை முறைப்படுத்துகின்ற சிறந்த கொள்கையுடனான திட்டங்களைக் கொண்ட வரவு-செலவுத் திட்டம் இது.

அந்தவகையில் இதன் மூலம் சட்டங்கள் பல திருத்தம் செய்யப்படுகின்றன. அரசு நிதி தொடர்பான பொறுப்புக்கூறும் சட்டமும் திருத்தப்படுகின்றது-என்றார். (அ)

# கருத்துச் சுதந்திரத்தை நசுக்கியுள்ளார் ரணில்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடல்

கொழும்பு, செப்.01

**பயங்கரவாத தடுப்புச் சட்டங்களைப் பயன்படுத்தி, அமைதியான போராட்டக்காரர்களைக் குறிவைப்பதை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

கடந்த 18 ஆம்திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மூன்று ஆர்வலர்களை, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர். இதில் விசாரணையின்றி ஒரு வருடம் வரை தடுப்புக் காவலில் வைக்க முடியும்.

ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உள்ளிட்ட உரிமைகளை நசுக்கியுள்ளார்.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை இடைநிறுத்துவதாகவும், உரிமைகளை மதிக்கும் சட்டத்தை அதற்குப் பதிலாக மாற்றுவதாகவும் அளித்த வாக்குறுதிகளை மீறியுள்ளன.

சீர்திருத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் மக்களை அமைதியான முறையில் முடக்குவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க பயன்படுத்தியிருப்பது, அவரது நிர்வாகத்தின் போது உரிமைகளுக்கு முன்னுரிமை கிடைக்காது என்ற ஒரு செய்தியை இலங்கையர்களுக்கு அனுப்புகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்தார். (அ)

# எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கல் சீராகியது

கொழும்பு, செப். 01

எரிபொருள் விநியோகத்தில் நிலவிய தடங்கல்கள் சீராக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர ருவிட்டர் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நான்கு நாட்களாக மேலதிக எரிபொருள், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இனி நாளாந்தம் 4000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 3000 மெற்றிக் தொன் பெற்றோல் என்பன இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும்.

அதேநேரம் மேலும் 35,000 மெற்றிக் தொன் 92 ஒக்ரேன் பெற்றோலைக் கொண்ட கப்பல் ஒன்றிலிருந்து தரையிறக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்டன என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (அ)

# மே 9 வன்முறைச் சம்பவம்; மேலும் 11 பேர் கைதாகினர்

கொழும்பு, செப். 01

கடந்த மே மாதம் 9ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, பாராளுமன்ற உறுப்பினர் தாரக பாலசூரியவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய நான்கு சந்தேக நபர்களை கேகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்கவின் வீட்டை தாக்கிய சந்தேக நபரொருவர், பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோவின் வீட்டை தாக்கிய நபர் ஒருவர், அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மாத்தறை பிரதேச சபையின் தவிசாளரின் வீட்டுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் இருவரும் எலஹெர பிரதேச சபை தவிசாளரின் சொத்துக்களை சேதப்படுத்தியமை தொடர்பில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# உலர் உணவுப்பொருட்கள் வழங்கியது பங்களாதேஷ்

கொழும்பு, செப். 01

பங்களாதேஷில் உள்ள மக்கள் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளனர்.

21,000 அமெரிக்க டொலர் பெறுமதியான உலர் உணவுகள் மற்றும் கல்விப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முதற்கட்டமாக 120 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவு விநியோகிக்கப்பட்டதுடன் மேலும் பல கட்டங்களாக இது நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# மண்சரிவு அபாயம்

கொழும்பு, செப். 01

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக 04 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கேகாலை, கண்டி, மாத்தளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த மாவட்டங்களில் மண்சரிவு மற்றும் பாறைகள் சரிவு ஏற்படக் கூடும் என்ப தால், மக்கள் விழிப்புடன் இருக்குமாறு அந்த அமைப்பு மக்களுக்கு அறிவுறுத்துகிறது.

இதேவேளை, இலங்கையை அண்மித்த வளிமண்டலத்தின் கீழ் வளிமண்டலத்தில் கொந்தளிப்பான சூழல் நிலவுவதால், நாட்டின் பல பகுதிகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# கோதுமை மா இருப்பை உடன் சந்தைக்கு விநியோகியுங்கள்!

## நிறுவனங்களிடம் கோருகிறார் அமைச்சர் நளின்



கொழும்பு, செப். 01

பிரிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்களிடம் தற்போதுள்ள கோதுமை மா இருப்பை சந்தைக்கு விநியோகிக்குமாறு எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றை விடுக்கவுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கையில்-

கோதுமை மா இறக்குமதி தொடர்பில், அமைச்சருக்கும் கோதுமை மா இறக்குமதியாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கோதுமை மா இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக சந்தையில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அந்தக் கலந்துரையாடலில், கோதுமை மா உற்பத்தி விலை மற்றும் கொள்ளளவு தொடர்பில் கோதுமை மா இறக்குமதியாளர்களிடம் இருந்து அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுமாறு வர்த்தக அமைச்சர் அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது நிலவும் கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு காரணமாக 50 கிலோ கிராம் கொண்ட கோதுமை மாவின் விலை 20,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இந்தியா ஊடாக கோதுமை மா இறக்குமதி நிறுத்தப்பட்டமையே இதற்கான காரணம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், துருக்கி ஊடாக கோதுமை மாவை கொண்டு வருவதற்கு சுமார் 2 வாரங்கள் ஆகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# கோழித் தீவனத்தின் விலை குறைக்கப்படும்

கொழும்பு, செப். 01

கோழி தீவனத்துக்காக பயன்படுத்தப்படும் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, முட்டை உற்பத்தியாளர்கள் அதிகபட்ச சில்லறை விலையில் முட்டைகளைச் சந்தைக்கு விநியோகிக்க முடியும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ கூறினார்.

வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகவும் கபில நிற முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபாவாகவும் நிர்ணயித்து அரசாங்கம் அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.

முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையில் எந்த மாற்றமும் இல்லை என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முட்டையொன்றை 50 ரூபாவுக்கும் குறைவான விலையில் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார். (அ)



# வவுனியா மாவட்டத்தில் பெருகும் பார்த்தீனியம்!

வவுனியா, செப். 01
வவுனியாவில் பல பகுதிகளை பார்த்தீனியம் களை ஆக்கிரமித்துள்ளது.
குறிப்பாக நகர் பகுதிகள், வீதியோரங்கள், ரயில் பாதைகளுக்கு அருகில், விவசாய நிலங்கள் என பல இடங்களில் இவை ஆக்கிரமித்துள்ளன.
விவசாயத்துறைக்கு அதிகளவில் கேடு விளைவிக்கும் தாவரமாக பார்த்தீனியம் காணப்படுகின்றது.
விவசாயப் பயிர்களை அழித்து ஆக்கிரமித்து வளரக்கூடிய தன்மையுள்ளமையால், இந்த களை பரவும் இடத்தில் பயிர்ச்செய்கை பண்ணமுடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.
இதேவேளை, பார்த்தீனியக் களை பரவுவதைத் தடுப்பதற்கு கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அச்செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படாமையினாலே தற்போது இந்நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 20 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, செப். 01
வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக 20 மாவட்டங்களுக்கு அதிக ஆபத்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் நேற்று தெரிவித்துள்ளது.
மேற்கு, தெற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.
மலைப்பாங்கான சரிவுகளில் (குறிப்பாக மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகள்) மற்றும் ஆற்றுப் படுகைகளை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு திணைக்களம் கேட்டுள்ளது.
மலைப்பாங்கான பகுதிகளிலும் சரிவுகளிலும் உள்ள வீதிகளைப் பயன்படுத்தும் வாகன ஓட்டிகள், மின்னல், நிலச்சரிவு போன்றவற்றால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து அவதானமாக இருக்குமாறும், மரங்கள், பாறை சரிவுகள் மற்றும் மின்கம்பிகள் விழுவதைக் குறித்தும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.
இதன்படி, திருகோணமலை, அனுராதபுரம், புத்தளம், பொலன்னறுவை, மாத்தளை, மட்டக்களப்பு, குருநாகல், கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா, பதுளை, அம்பாறை, மொனராகலை, களுத்துறை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட 20 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மேலும், வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறும், அவசர உதவிக்கு உள்ளூர் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளை தொடர்பு கொள்ளுமாறும் திணைக்களம் கோரியுள்ளது. (அ)

# கிளிநொச்சி நகர சபைக்கு உரிய எல்லைகளை மீள்நிர்ணயம் செய்க!

## பிரதமருக்கு சந்திரகுமார் கடிதம்

கிளிநொச்சி, செப். 01

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையை நகர சபையாக தரம் உயர்த்தும் அமைச்சரவை அனுமதி மகிழ்ச்சி தருக்கிறது. இருப்பினும் நகர சபைக்கான எல்லை நிர்ணயத்தில் சமூகங்களை பிரிக்கின்ற வகையிலும், குறுகிய அரசியல் இலாபங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே கிளிநொச்சி நகர சபைக்கான எல்லை நிர்ணயத்தை மீள பரீசீலனை செய்து நியாயமான அடிப்படையில் அனைத்து தரப்பினர்களதும் கருத்துக்களை பெற்று வரையறுக்குமாறு கோரி பிரதமருக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் செயலாளருமான மு.சந்திரகுமார் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.**

அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
சன அடர்த்தி செறிவாகவும், நகர கட்டமைப்பொன்றுக்கு தேவையான அனைத்து அம்சங்களை தன்னகத்தே வைத்திருந்தும் நீண்டகாலமாக பிரதேசசபை என்ற தகுதி நிலையில் நிர்வகிக்கப்படும் கிளிநொச்சி நகரினை, நகரசபை என்ற படிநிலைக்கு தரம் உயர்த்துவதற்குரிய முன்மொழிவுகள் தங்களது அரசால் வெளியிடப்பட்டிருப்பதை கிளிநொச்சி நகர மக்களின் சார்பில் பேருவகையுடன் வரவேற்கிறோம். போரினால் மிகக்கடுமையாக பாதிப்புற்ற பிரதேசங்களில் ஒன்று என்ற வகையில் மேற்படி தரமுயர்த்தும் செயற்பாடு, நீடித்ததும் நிலையானதுமான அபிவிருத்தியை நோக்கி கிளிநொச்சி நகரை முன்னகர்த்தும் என்ற திடமான நம்பிக்கை எமக்கு இருக்கிறது.
எனினும், ஒரு ஊள்ளூராட்சி அமைப்பொன்றினை தரமுயர்த்துவது தொடர்பாக கருத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டிய விடயங்கள் அனைத்தும் கிளிநொச்சியை நகரசபையாக்கும் விடயத்தில் எச்சரிக்கையோடு தவிர்க்கப்பட்டிருப்பதோடு, ஒரு சில தனி நபர்களின் அரசியல் அபிலாஷைகள் மட்டுமே முன்னிறுத்தப்பட்டிருப்பதும் வேதனையான விடயமாகும். கிளிநொச்சி நகர் உள்ளடங்கிய கரைச்சி பிரதேச சபையில் பதினோரு உறுப்பினர்களை கொண்டிருக்கும் கட்சியென்ற அடிப்படையில் பின்வரும் விடயங்களை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.
1. நகருக்குள் உள்ளடக்கப்படவேண்டிய பிரதேசங்கள் தொடர்பிலோ அல்லது அதன் எல்லைகளாக வரக்கூடிய கிராமங்கள் தொடர்பிலோ அங்கே வசிக்கக்கூடிய மக்களுடனோ அல்லது அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் அமைப்புகளுடனோ எந்தவிதமான கலந்துரையாடலும் எந்த சந்தர்பத்திலும் அதற்கு பொறுப்பானவர்களால் நடத்தப்பட்டிருக்கவில்லை.
2. கரைச்சி பிரதேச சபைக்குள் மொத்தமாக 21 வட்டாரங்கள் இருப்பதும் அவற்றுள் குறிப்பிடத்தக்க அளவு நகர சபை என்ற பரிமாணத்துக்குள் வரக்கூடியதாக இருந்தாலும், வெறும் மூன்று வட்டாரங்களை மட்டுமே கிளிநொச்சி நகரசபைக்கென ஒதுக்கீடு செய்திருப்பது, இயற்கைக்கு மாறானது என்பதோடு, நிர்வாக செயற்பாட்டுக்குரிய சபையொன்றினை அமைப்பதற்கும் சவாலானதாக இருக்கும்.
3. நகரின் மத்தியிலும், அண்மையிலும் உள்ள சில கிராமங்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டிருக்கும் அதேநேரம், நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு பகுதி நகரசபை எல்லைக்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறது.
4. நகரின் முக்கிய பகுதிகளாக தற்போது கருதப்படும் பல பகுதிகள் எந்தவித நியாயமுமற்று வெளியே தள்ளப்பட்டிருப்பது அங்கே நீண்ட காலமாக வசித்துவரும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தின்மீது திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் ஒரு தாக்குதலாகவே பார்க்கப்படுகின்றது.
எனவே, குறுகிய அரசியல் நலன்களை மட்டுமே முன்னிறுத்தி, அங்கே வசிக்கக்கூடிய மக்கள்மத்தியில் நிரந்தரமான பிரிவினை உருவாக்கக்கூடிய் எவருடனும் கலந்தாலோசிக்கப்படாத நகரசபை உருவாக்கும் முயற்சியை மறுபரிசீலனை செய்து, சரியானதும் பொருத்தமானதுமான பொறிமுறையொன்றின் கீழே கிளிநொச்சியை நகர சபையாக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தங்களை பணிவுடன் வேண்டி நிற்கிறோம்-என்றுள்ளது. (அ)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு சீன தூதரகத்தால் ரூ.42 மில்லியன் உதவி!

யாழ்ப்பாணம், செப். 01
சீனத் தூதரகத்தால் 42 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிப் பணம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.
இதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் விவரம், சீனத் தூதரகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.
இந்த உதவித் தொகை வழங்கும் நிகழ்வில் சீனத் தூதுவர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது.
இருப்பினும், சீனத் தூதுவர் இனப்படுகொலை தொடர்பில் தெரிவித்த கருத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ள நிலையிலும், யாழ். பல்கலைக்கழகத்திலுள் சீனச் சார்பு நடவடிக்கைகளை அவர்கள் வெளிப்படையாக எதிர்த்துள்ள நிலையிலும் இந்த உதவித் தொகை வழங்கப்படுமா என்பது சந்தேகமாகியுள்ளது.
சீனத் தூதரகம் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு 2016ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் இந்த உதவித் தொகையை வழங்கி வருகின்றது. இந்த ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்களுக்கே உதவித் தொகையை வழங்கச் சீனத் தூதரகம் தீர்மானித்துள்ளது.
கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்கனவே உதவித் தொகை வழங்கப்படுகின்றது.
இந்தநிலையில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 70 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்துக்கு உதவித் தொகை வழங்குவதற்காகவே மாணவர்கள் விவரம் சீனத் தூதரகத்தால் கோரப்பட்டுள்ளது. (அ)

# மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை உயிரிழப்பு

கொழும்பு, செப். 01
நவகத்தேகம பிரதேச செயலகத்திற்குற்பட்ட தம்மன்னா வெட்டிய கிராமத்தில் காட்டு யானையொன்று நேற்று அதிகாலை மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளது.
இந்தக் காட்டு யானை கிராமத்திலேயே பல நாட்களாக அங்குமிங்கும் சுற்றித்திரிந்ததாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.
இக்காட்டு யானை 25 வயது மதிக்கத்தக்கதென வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
வீடொன்றிலிருந்து அதிவலு கொண்ட மின்சாரத்தைப் பெற்று யானை வேலியில் பொருத்தியமையினாலேயே யானை உயிரிழந்துள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகள் கூறினர்.
இதன்போது வீட்டின் உரிமையாளர் இரண்டு வருடங்களுக்கு முன்னரே உயிரிழந்துவிட்டதாகவும் அவரது தாயார் இந்த வீட்டிலேயே வசித்து வந்துள்ளதாகவும் இவ்வாறு யானை வேலிக்கு அதிவலு கொண்ட மின்சாரம் பொருத்தப்பட்டிருப்பது தொடர்பில் தனக்கு தெரியாதெனவும் 75 வயது டைய தாயார் விசாரணையின்போது தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையில் அதானியின் காற்றாலை திட்டத்தை எதிர்க்கும் மக்கள்!





ரஞ்சன் அருண் பிரசாத்




இலங்கையின் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்படும் கனிய வள மண் அகழ்வு மற்றும் உயர் வலுக் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு இந்த எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்திருந்தது.

மன்னார் மாவட்ட மக்கள், மீனவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் என பலரும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துக் கொண்டிருந்தனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், மன்னார் நகர் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன், தனியார் பேருந்து போக்குவரத்து நடவடிக்கைகளும் இடை நிறுத்தப்பட்டிந்தன.

கனிய மணல் அகழ்வு காரணமாக மன்னார் தீவு பகுதியில் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும், காற்றாலை மின் உற்பத்தி திட்டம் காரணமாக எதிர்காலத்தில் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் கோரியே இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த இரண்டு திட்டங்களையும் உடனடியாக மன்னார் தீவு பகுதியில் நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்து, எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பெண்ணொருவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

"இந்த இடத்தில் இவ்வளவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். எதற்காக? தீவை நாசப்படுத்துவதற்கு அபிவிருத்திகளை காட்டி, எங்களை ஏமாற்றி மண் வளம் நாசமாகிக் கொண்டு போகின்றது. காலப் போக்கில் இந்த தீவு அழிந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் இருப்போமோ தெரியாது. எங்களுடைய தீவு விற்கப்படுகின்றது. எங்களுடைய தீவை இழப்பதற்கு நாங்கள் விட்டு விட மாட்டோம். மண் அகழ்விலிருந்தும், காற்றாலை திட்டத்திலிருந்தும் விடுபடத் தக்கதாக எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். தீர்வை காணாமல் இந்த இடத்தை விட்டு நாங்கள் போக மாட்டோம்" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்ணொருவர் கருத்து தெரிவித்தார்.

"எங்களுடை மன்னார் மாவட்டத்தில் காற்றாலை அமைக்கின்றமையினால், ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து நாங்கள் பல இடங்களில் பல தடவைகள் சொல்லியிருக்கின்றோம். ஆனால் மீண்டும் அது பற்றிய பேச்சுக்கள் நடந்துக்கொண்டிருக்கின்றது. எங்களுடைய கரைவலைப்பாடு இடங்களில் இந்த காற்றாலை மின்சாரம் அமைக்கின்றமையினால், எங்களுடைய 7 தொடக்கம் 10 கிலோமீற்றர் இடம் பறிப் போகின்றது. எங்களுடைய தொழிலுக்கும் இடைஞ்சலாக இருக்கின்றது. எங்களுடைய தொழிலை முடக்குகின்ற செயற்பாடாகவே நாங்கள் இதனை பார்க்கின்றோம்" என ஆர்ப்பாட்டத்தில் கலந்துக் கொண்ட ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த எதிர்ப்பு நடவடிக்கையின் போது, பொது மக்கள் கையெழுத்து பெறும் நடவடிக்கையொன்றை ஆரம்பித்திருந்தனர்.

## அரசாங்க அதிபரிடம் கோரிக்கை மனு

கனிய வள மண் அகழ்வு மற்றும் உயர் வலுக் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றுக்கொள்ளப்பட்ட கையெழுத்துடனான மகஜரொன்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கான அதிகாரம் தனக்கு இல்லாமையினால், இது தொடர்பில் தான் மேலிடத்திற்கு அறிவிப்பதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மக்களினால் கையளிக்கப்பட்ட இந்த மகஜரை, தான் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

வடக்கின் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை, இந்தியாவிற்கு சொந்தமான அதானி நிறுவனத்திற்கு வழங்க இலங்கை அரசாங்கம் கடந்த 16ஆம் தேதி தீர்மானித்திருந்தது.

இலங்கையின் வட பகுதியிலுள்ள மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு அதானி நிறுவனத்திற்கு அனுமதியை வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## அதானிக்கு வாய்ப்பு கொடுத்த அரசாங்கம்

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு இந்த அனுமதி தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளதாக மின்வலு, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, கடந்த 16ம் தேதி டுவிட்டர் பதிவொன்றின் ஊடாக தெரிவித்திருந்தார்.

மன்னார் பிரதேசத்தில் 286 மெகா வாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மற்றும் பூநகரி பிரதேசத்தில் 234 மெகா வாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை ஸ்தாபிப்பதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த திட்டத்திற்காக அதானி நிறுவனம் 500 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிக்கின்றார்.

இவ்வாறான நிலையில், காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், கனிய வள மண் அகழ்விற்கும் மன்னார் மாவட்டத்தில் எதிர்ப்புகள் ஆரம்பமாகியுள்ளன.





கலாநிதி ஜெகான் பெரேரா



# அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கவேண்டிய மூன்று செயற்பாடுகள்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்புவதற்கு வசதியான ஏற்பாடுகளைச் செய்து அவரை பிரதமராக நியமிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு ஆளும் கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் ஜூலையில் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டதை அடுத்து முன்னாள் ஜனாதிபதி நாட்டில் இருந்து வெளியேறினார். அவர் தஞ்சம் கோரி நாடு விட்டு நாடு அலைவதைக் காண பலரும் விரும்பவில்லை.

போராட்ட இயக்கத்தை ஆதரித்தவர்கள் கூட அவர் நாடு திரும்புவதை எதிர்க்கப்போவது சாத்தியமில்லை. ஆனால், அரசியல் விவகாரங்களில் அவர் தீவிரமாக பங்கேற்பதை ஊக்கப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கும் என்பதுடன் "கோட்டா கோ ஹோம்" போராட்டத்தின் பிதான குறிக்கோளுக்கு எதிரானதுமாகும் அரசாங்கத்தையும் வலுவிழக்கச்செய்யும்.

பெரும்பாலான அதிகாரங்களை தன்வசம் வைத்திருந்த அரசியல் தலைவர் என்ற வகையில், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பானவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதியே போராட்ட இயக்கத்தின் பிரதான இலக்காக இருந்தார். இரசாயன உரவகைகளைத் தடை செய்து இரவோடிரவாக இலங்கையின் விவசாயத்தை இயற்கை விவசாயமாக மாற்றுவதற்கு அவர் மேற் கொண்ட தவறான ஆலோசனையின் அடிப்படையிலான தீர்மானம் போன்ற வேறு காரணங்களும் இருக்கின்றன. அந்த கொள்கை ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே விவசாயிகளுக்கு பெரும் அவலத்தை ஏற்படுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும், முன்னாள் ஜனாதிபதியைப் பிரதமராக்குவது அரசாங்கத்திற்குள் செல்வாக்குமிக்க பிரிவொன்றின் தலைவரும் விளங்குபவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமானவருமான தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவை பதிலீடு செய்வதாகவே அமையும். விக்கிரமசிங்கவுடனான அவரின் நெருக்கம் இருவரும் இணைந்து செயற்படுவதற்கு வசதியான சூழ்நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதிக்கு ஏதாவது நேர்ந்தால் அவரின் இடத்துக்கு வருபவர் பிரதமர் என்ற முறையில் இந்த விவகாரம் மீது இறுதி முடிவெடுப்பதில் அவரும் ஒரு பங்கை வகிக்கும் சாத்தியம் இருக்கிறது எனலாம்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்களை அமைச்சர்களாக நியமிக்குமாறு விடுக்கப்பட்டிருக்கும் மற்றைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்வது ஜனாதிபதியைப் பொறுத்தவரை கஷ்டமானதாக இருக்கும். அவர்களில் பலர் பெருமளவு ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களாக இருப்பதுடன் போராட்ட இயக்கத்தின் முக்கிய கவனத்துக்குரியவர்களாகவும் விளங்கினர். தற்போது மீண்டும் அமைச்சர்களாக வரவேண்டும் என்று விரும்புபவர்கள் முன்னர் அரசாங்கத்தில் வகித்த பதவிகளில் இருந்து இராஜினாமா செய்த வேளையில் பிரதமர் பதவியை பொறுப்பேற்பதற்கு விக்காரமசிங்க முன்வந்தது குறித்து அவர் மீது கடுமையான அதிருப்தியும் ஏற்கெனவே இருக்கிறது.

அந்த நேரத்தில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றதால் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள் என்று மக்கள் மத்தியில் எண்ணம் ஏற்பட்டது. அந்த எண்ணம் தொடர்ந்தும் இருக்கிறது. இப்போது மீண்டும் அவர்கள் அமைச்சர்களாக வந்தால் அதற்கான சூழ்நிலை உருவாக காரணமாக இருந்தவர் ஜனாதிபதியே என்ற எண்ணம் வலுப்பெறும். தங்களுக்கு மீண்டும் அமைச்சர் பதவிகள் தரப்படவேண்டும் என்று விரும்புபவர்கள் தங்களுக்கு வாக்களித்து அதிகாரத்துக்கு கொண்டுவந்த மக்கள் மத்தியில் தாங்கள் நம்பிக்கையையும் நியாயப்பாட்டையும் இழந்துவிட்டதை விளங்கிக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது. அவர்கள் தங்களது தொகுதிகளுக்கு சென்று சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்படக்கூடிய நிபந்தனைகள் எவ்வாறு பாதிப்புக்களை ஏற்படுத்தப்போகிறது என்பதை மக்களுக்கு கூற இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

**மீள்விக்கப்பட்ட வழமைநிலை**

ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் முதல் ஐந்து வாரங்கள் குறித்து மக்கள் மத்தியில் நேர்மறையானதும் எதிர்மறையானதுமான பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றன. போராட்ட இயக்கத்தை படைபலம் கொண்டு ஒடுக்கும் அவரது நடவடிக்கைகள் அவரை தேசிய அரசியலில் தாராளபோக்குடைய ஒரு மிதவாத தலைவராக நோக்கியவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. அடிப்படையில் விக்கிரமசிங்கவின் அரசியல் எதிரிகளுக்கு எதிரானதாக அமைந்த போராட்ட இயக்கத்தை ஆதரித்தவர்களுக்கு போராட்டக்காரர்கள் மீது அவருக்கு அனுதாபம் இல்லாமல் போனதை விளங்கிக்கொள்ளமுடியாமல் இருக்கிறது. அதே போராட்டம் தான் இவர் அதிகாரத்துக்கு வருவதற்கு வழிவகுத்தது.

கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே போராட்டக்களத்தை நள்ளிரவு படையினர் முற்றுகையிட்டு நித்திரையில் இருந்த நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் மீது கொடூரமான முறையில் நடத்திய தாக்குதல் தொடங்கி ஜனாதிபதியின் பியர் குவளையை நினைவுச்சின்னமாக எடுத்தச் சென்றவர் உட்பட சட்டத்துக்கு புறம்பாக அற்ப செயல்களைச் செய்தவர்களை வேட்டையாடுவதுவரை அரசாங்கத்தின் அடக்குமுறை பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. இந்த நடவடிக்கைகளை இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் நாட்டு நலனில் அக்கறை கொண்ட பிரசைகள் மாத்திரமல்ல, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களும் உன்னிப்பான கவனத்தில் எடுத்திருக்கின்றன.

கடந்த மாதத்தில் ஒரு தளர்வான வழமைநிலை ஏற்படுத்தப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. மெய்யான வழமைநிலை போன்று இது காணப்படாவிட்டாலும் மக்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள் போன்று தெரிகிறது. மின்வெட்டும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளும் சில வாரங்களாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தொடர்ந்தும் இதே நிலை நீடிக்குமா என்ற அச்சமும் இருக்கிறது போன்று தெரிகிறது.

நாட்டுக்கு வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு நடத்துகின்ற பேச்சுவார்த்தைகள் எதிர்பார்க்கப்படுகின்ற நிதியுதவிகள் விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையை கொடுத்திருக்கின்றன. சிறுவர்களுக்கு தேவையான ஊட்டச்சத்தில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மக்களில் கணிசமான பிரிவினர் தங்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்கு பெரும் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் உகந்த உணவை நேடமுடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதையுமே இது காட்டுகிறது. வீடுகளுக்குள் உள்ள இந்தப் பிரச்சினை புதிய போராட்டங்கள் மூலமாக இன்னும் வெளிக்காட்டப்படவில்லை.

போராட்ட இயக்கம் இடதுசாரிகளாலும் தீவிரவாதிகளினாலும் கடத்திச் செல்லப்பட்டுவிட்டது என்ற வாதம் அந்த இயக்கத்தை பலவந்தமாக ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த படைபலப் பிரயோகமும் தவறான கற்பிதங்களும் நீண்டகால நோக்கில் பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும்.

மறுபுறத்தில், ஜனாதிபதி விக்கிரமசிங்கவை நிராகரிப்பதற்கு முன்னதாக அவருக்கு கூடுதல் கால அவகாசத்தை வழங்குவதற்கு மக்கள் தற்போது பெரும்பாலும் முன்வருகிறார்கள் போன்று தெரிகிறது. உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் விவகாரங்களை நன்கு விளங்கிக்கொண்டுள்ள அனுபவ முதிர்ச்சியுடைய அரசியல்வாதியான ஜனாதிபதி இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு முக்கியமாக தேவைப்படுகின்ற சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பொருத்தமானவர் என்று பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தாராளவாத போக்குடைய மிதவாதியான ஜனாதிபதி இன, மத அடிப்படையில் பாரபட்சம் காட்டுகின்ற சிந்தனைப்போக்கையோ அல்லது சமூகங்களுக்கு எதிராக வன்மத்தைச் சாதிக்கின்ற சுபாவத்தையோ கொண்டிராத ஒருவர் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஜனாதிபதிகளாக இருந்த போது பிரதமராக பதவிவகித்த விக்கிரமசிங்க சமாதானம், நல்லிணக்கம் தொடர்பான விவகாரங்களில் கூடுதல் கரிசனை காட்டிய ஒருவராகவும் சர்வதேச மற்றும் மனித உரிமைகள் நியமங்களின் வழியில் சிவில் சமூகத்தை அனுசரிக்கும் ஒருவராகவும் நோக்கப்பட்டவர்.

**அவசரமான செயற்பாடுகள்**

பொதுவில் அரசாங்கமும் குறிப்பாக ஜனாதிபதியும் அவசரமாக மூன்று செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. போராட்ட இயக்கத்துக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். அந்த நடவடிக்கைகளின் மட்டுமீறிய தன்மை அரசாங்கத்துக்கு நாட்டுக்குள்ளும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றது.

ஊழல் தொடர்பில் அதிகார துஷ்பிரயோகத்தைச் செய்தமைக்காக நீதிமன்றங்களினால் குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த செயலுடன் ஒப்பிடும்போது தற்போது இடம்பெறுகின்ற கைது நடவடிக்கைகளின் மட்டுமீறிய தன்மையை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த சமச்சீரற்ற அடக்குமுறைக்கான முழுப்பொறுப்பும் முற்றுமுழுதாக ஜனாதிபதி மீதே சுமத்தப்படும். ஏனென்றால் அவரே பாதுகாப்பு அமைச்சராகவும் முப்படைகளின் பிரதம தளபதியாகவும் இருப்பதுடன் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கின்ற அரசியலமைப்புக்கான 20 வது திருத்தத்தின் கீழான சர்வ அதிகாரங்களையும் கொண்டவராகவும் இருக்கிறார். தன்னைப் பற்றி நிலவுகின்ற தப்பெண்ணத்தை அவர் நீக்கவேண்டியது முக்கியமானதாகும். அரசாங்கத்தின் குண்டர்கள் ஒருபோதும் நீதியின் முன் நிறுத்தப்படுவது சாத்தியமில்லை என்ற உண்மையை ஒத்துக் கொண்டு போராட்ட இயக்கத்தில் ஈடுபட்மைக்காக கைதானவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுவதை உறுதிசெய்வதன் மூலமாக இதை அவர் செய்யலாம்.

இரண்டாவதாக, அரசாங்கம் அதன் பொருளாதாரத் திட்டத்தைப் பற்றி பெருமளவுக்கு வெளிப்படையானதாக இருக்கவேண்டும். இதுவே பொதுமக்களைப் பொறுத்தவரை முக்கிய கரிசனைக் குரியதாக இருக்கிறது. கொழும்பில் அண்மையில் பெட்ரோலுக்கும் டீசலுக்கும் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக தோன்றிய நீண்ட வரிசைகள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மக்கள் அவசரப்பட்டு எரிபொருட்களை வாங்குவதற்கு முண்டியடிப்பதற்கு வழிவகுத்தது. மின்வெட்டு நேரம் நீடிக்கப்படலாம் என்ற ஊகங்களும் அடிபடுகின்றன. 300 க்கும் அதிகமான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தற்காலிக தடை சர்வதேச நாணய நிதியத்தின் நிதியைப் பெறுமுகமாக முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளுக்கான அறிகுறியாகும்.

வெளிப்படைத்தன்மை இல்லையானால், அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் தனக்கு அனுகூலமான முறையில் பொருளாதார மறுசீரமைப்பு செயன்முறையை முன்னெடுக்க கூடுதல் ஆற்றல் தனக்கு கிடைக்கும் என்று நம்புவதனாற் போலும் அரசாஙகம் பொருளாதாரத் திட்டத்தை வெளிப்படையாக முன்வைக்க விரும்பாமல் இருக்கக்கலாம். ஆனால் இது அரசாங்கம் நியாயப்பாடு இல்லாத ஒன்று என்று ஏற்கெனவே உணருகின்ற மக்கள் பிரிவினரிடமிருந்து மேலும் தனிமைப்படவே வழிவகுக்கும்.


இலங்கையில் தற்போது ஏற்பட்டிருப்பதைப் போன்ற பொருளாதார நெருக்கடி பெரும்பாலான ஜனநாயக நாடுகளில் தோன்றியிருந்தால் அரசாங்கம் பதவியில் இருந்து இறங்கி புதிய தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு வழிபிறந்திருக்கும். ஆனால், ஜனாதிபதியோ அல்லது தற்போதைய அரசாங்கமோ பதவி விலகவோ அல்லது பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல்களை நடத்துவதற்கோ விருப்பத்தை வெளிக்காட்டவில்லை. 20வது திருத்தத்தின் கீழ் அடுத்த வருடம் பெப்ரவரியில் மாத்திரமே பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான சட்ட அதிகாரத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க பெறுவார். அதேவேளை அரசாங்கம் மாகாணசபை தேர்தலை நடத்தமுடியும்.

மாகாணசபைகளை மீண்டும் ஏற்படுத்தினால், தீர்மானங்களை எடுக்கும் பதவிகளுக்கு புதிய மக்கள் ஆணையுடன் பிரதிநிதிகளை கொண்டுவருவதன் மூலம் அரசாங்க முறைமைக்கு நியாயப்பாட்டை மீள ஏற்படுத்தமுடியும் என்பதுடன் சமூகத்தில் பதற்றத்தை தணிக்கக்கூடியதாகவும் இருக்கும். இதனால் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான போதுமான கால அவகாசம் அரசாங்கத்துக்கு கிடைக்கக்கூடியதாகவும் இருக்கும்.

இலங்கை நிலைபேறான தேசிய பொருளாதார பாதையில் பயணிக்க வேண்டுமாக இருந்தால் பொதுவில் அரசாங்கமும் குறிப்பாக ஜனாதிபதியும் (அவர் மீதே கூடுதல் நம்பிக்கை வைக்கப்படுகிறது) காலத்தின் சோதனைக்கு நின்றுபிடிக்கக்கூடிய கொள்கைகளை வகுக்கவேண்டியது அவசியமாகும்.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........  ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.....................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...............................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...............................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.....................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.....................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்

1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?

1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?

1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

1) 1976  2) 1851  3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?

1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8  **19.** $\frac{3}{10}$

**20.** 1) 128, 130  2) 9, 6

**21.** 3, 6, 9, 12

**22.** 745  **23.** 455

**24.** 1l 100ml / 1100ml  **25.** ரூபாய் 144.00

**26.** 1) 190  2) 100  3) 290

**27.** 15 : 30  **28.** 5m 50cm / 550cm

**29.** 36 பூக்கள்

**30.** 1  **31.** 2  **32.** 3

**33.** 2  **34.** 3  **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**01.08.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**01.08.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஒரு கோடி 40 இலட்சம் ரூபா பெறுமதியான பவுசர் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு!

மட்டக்களப்பு, செப். 01

ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ஒரு கோடியே 40 இலட்சம் பெறு மதியான நீர் வழங்கும் பவுசர் சம்பிரதாயபூர்வ மாக சேவையில் ஈடுபடுத்தப்படும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தின் முன்பாக இடம்பெற்றது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சின் ஊடாக பிரதமர் தினேஸ் குண வர்த்தனவினால் கடந்த வாரம் பிரதேசசபை தவிசாளர் த.கிரோ ஜாதரனிடம் கையளிக்கப் பட்ட நீர் வழங்கும் பவுசரின் சேவை ஆரம்ப நிகழ்வே இவ்வாறு



நடைபெற்றது.

கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்று வரு கின்ற ஆலய உற்சவத்தை முன் னிட்டு ஆலயத்திற்கான நீர் வழங் கும் பணியும் இதன் மூலம் இடம் பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தவிசாளர் த.கிரோஜா தரனின் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வின் ஆரம்ப பூஜை வழிபாடு களை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.கௌரிசங்கர் குருக்கள் நடத்தினார்.

நிகழ்வில் பிரதேச சபை யின் தொழிநுட்ப உத்தி யோகத்தர் உள்ளிட்ட ஆலய நிருவாகத்தின ரும் கலந்து கொண்டனர்.

இதன் மூலம் ஆலையடிவேம்பு பிரதேச சபைக் குட்பட்ட பிரதே சங்களுக்கான குடிதண்ணீர் வழங் கும் பணி இலகுபடுத்தப்பட்டுள்ள தாகவும் இதனை வழங்கிய அரசாங் கத்துக்கு தவிசாளர் நன்றி தெரி வித்தார். (அ)

# காத்தான்குடியில் முஹர்ரம் புதுவருட கலைப் பெருவிழா




அம்பாறை, செப். 01

காரிகை கலை இலக் கியக் கழகத்தின் இவ்வருட இஸ்லா மிய முஹர்ரம் புது வருடக் கலைப் பெருவிழா காத்தான் குடி பிரதேச செய லக மாநாட்டு மண்டபத்தில் அமைப்பின் ஸ்தாபகத் தலைவி இலக்கியச் சுடர் ஜாஹிதா ஜலால்தீன் தலை மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 6 பாட சாலை அதிபர்களுக்கு "காரிகை திலகம்" பட்டம் சூட்டப்பட்டு, நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌர விக்கப்பட்டதுடன், கலை இலக்கியத் துறைக்கு ஆற் றிய பெரும் பங்களிப்பி னைப் பாராட்டி 12 கலைஞர்களுக்கு "கலைக் காரிகை" பட்டம் இதன் போது வழங்கி கௌரவிக் கப்பட்டது.

இங்கு கவியரங்கு, தகறா, கோலாட்டம், நாட்டார் பாடல் என சிறார்களின் கண்கவர் கலை நிகழ்வுகளும், இஸ் லாமிய கீதம், நாட்டார் பாடல், கோலாட்டம், பெண் கவிதாயினிகளின் கவிதைய ரங்கு என்பன காரிகை கலை இலக்கியக் கழக அங்கத்தவர்களால் அரங்கேற்றப்பட்டன. (அ)

# மட்டு. பிரபல உணவகத்தின் பிரியாணியில் கரப்பான் பூச்சி!

மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்பில் உள்ள பிரபல உணவ கம் ஒன்றில் வழங்கப்பட்ட பிரியாணி உணவில் கரப்பான் பூச்சி இருந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கரப்பான் பூச்சியுடன் கோழி பிரியாணி பொதியை வழங்கிய மட்டக்களப்பு நகர் பிரதேசத் திலுள்ள பிரபல உணவம் ஒன்றின் உரிமையாளர் நேற்று முன்தினம் நீதிமன் றில் முன்னிலையாகினார்.

இந்நிலையில், அவரை எதிர் வரும் 8ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தர விட்டு 25,000 ரூபா சரீரப் பிணையில் நீதி பதி விடுவித்துள்ளார்.



குறித்த உணவகத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரிவு ஒன் றில் கட மையாற்றிவரும் வைத்தியர்கள் சம் பவ தினமான நேற்றுமுன்தினம் விருந்து உபசாரம் ஒன் றிற்காக கோழிப் பிரியாணி வாங்கிச் சென்று அதனை உண்ணுவதற் காக திறந்தபோது ஒருவரின் பொதியில் கோழிப் பொரியல் இறைச்சியுடன் கரப்பான் பூச்சியும் இருந்துள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்து உடனடியாக பொதுச் சுகாதார அதிகா ரிகள் குறித்த உணவகத்தை சோதனை யிட்டதுடன் உணவக உரிமை யாளரை கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தினர். (அ)

# சுகாதாரமற்றமுறையில் இயங்கிய உணவகங்களின் மீது நடவடிக்கை



மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்பு நகரிலுள்ள உணவகங்களை பொது சுகாதார அதிகாரிகள் திடீர் முற்றுகை யிட்டு சோதனை நடவடிக்கை ஒன்றை முன் னெடுத்தனர்.

இரண்டு பிரிவுகளாக பொது சுகாதார அதிகா ரிகள் உணவங்களை முற்றுகையிட்டனர் .

இதன்போது பாவனைக்கு உதவாத அரசி மூடைகளை கைப்பற்றியுள்ளதுடன் சுகாதாரமற்ற முறையில் செயற்பட்டுவந்த பல கடைகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் உதயகுமார் தெரிவித்தார்.

சுகாதாரமற்ற முறையில் பல உணவங் கள் செயற்பட்டுவந்ததை கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்ய நடவடிக்கையும் இதன்போது எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் அதேவேளை சுகா தாரம் பேனப்படாது மனித பாவணைக்கு உத வாத உணவுகளை விற்பனை உணவகங்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் உதயகுமார் கூறினார். (அ)

# அனுமதி பெறப்படாத அங்காடிகளுக்கு தடை

அம்பாறை, செப். 01

நிந்தவூர் - மாந்தோட்ட சந்தி, கல்முனை - அக்கரைப்பற்று பிர தான வீதி போன்ற இடங்களில் அனுமதியற்ற முறையில் நடை பெறும் வியாபார நடவடிக்கை கள் அனைத்தும், நாளை வெள் ளிக்கிழமை முதல் தடை செய் யப்பட்டுள்ளதாக, நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நிந்தவூர் பொதுச் சந்தைக்கு வருகை தந்து அனைவரும் தங் களுக்கு தேவையான மீன் மற் றும் மரக்கறி வகைகளை பெற் றுக் கொள்ளுமாறும் பொதுமக் களை அவர் கேட்டுள்ளார்.

வீதி ஓரங்களில் வீடுகளுக்கு முன்பாக மீன் வெட்டி வியாபா ரம் செய்யும் நடவடிக்கையும்



முற்றாக தடை செய்யப்பட்டுள் ளதுடன், அதனை மீறி இடம் வழங்கும் வீட்டு உரிமையாளர் களுக்கு எதிராக பிரதேச சபை கள் சட்டத்தின் கீழ் சட்ட நட வடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித் தல் பிரதேச சபையினால் பொது இடங்களில் சுவரொட் டிகள் மூலம் காட்சிப்படுத்தப் பட்டு வருகின்றன. (அ)

# கல்முனையின் சட்டம் ஒழுங்கு, போதை ஒழிப்பு நிர்வாக சீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்



அம்பாறை, செப். 01

கல்முனை தொகுதிக்கு உட்பட்ட சட்டமொழுங்கு விடயம் சம்பந்தமாக அம் பாறை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும், முன் னாள் இராஜாங்க அமைச்ச ருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் தலைமையில் கலந்துரை யாடல் ஒன்று கல்முனை மாநகர முதல் வர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இங்கு கல்முனை பிராந்திய கரை யோர பிரதேசங்களில் சட்ட விரோத இடம்பெறும் காணி அபகரிப்புக்கள், அனுமதிகளின்றி சட்ட விரோதமாக கடற்கரை ஓரங்களில் கடையமைத்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கல்முனை பிரதேசத்தில் சமீபத்தைய நாட்களில் தலைதூக்கி யுள்ள போதைவஸ்து பாவனையை இல் லாதொழிக்க விற்பனையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் எதிராக எவ்வித பாரபட்சமுமின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

மேலும் அரச அலுவலகங்களில் லஞ்சம் பெற்று கடமையாற்றுவதை தடுக்கும் நோக்கில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் லஞ்ச ஊழலுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது.

இந்த விடயங்களினால் சமூகம் எதிர் நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் அதி காரிகளுக்கு எடுத்துரைத்த பாராளு மன்ற உறுப்பி னர், துரிதகதியில் இவர்களுக்கு எதி ராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்த கலந்துரையாடலில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத் தரணி ஏ.எம். றக்கீப், பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கல்முனை மாநகர ஆணை யாளர் ஏ.எல். அஸ்மி, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரி எம்.நம்லீன் பக்கீர், கல்முனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதி காரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.எல் றபீக், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சட்டத் தரணி ஏ.எம். ரோஷன் அக்தர், சட் டத் தரணி ஆரிகா காரியப்பர், எம். எஸ்.எம். சத்தார், எம்.எம். உமர் அலி, எம்.எஸ்.எஸ். நவாஸ், எப்.நஸ்ரின், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத் தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)


# மாவோ சேதுங்கின் பின் அதிகளவு அதிகாரம் உள்ளவராக ஜி ஜின்பிங்!

## 3 ஆவது முறையும் ஜனாதிபதியாகிறார்

பீஜிங், செப். 01

சீனாவை ஆளும் கம்யூ னிஸ்ட் கட்சியின் மத்திய குழு எதிர்வரும் ஒக்ரோபர் 16 ஆம் திகதி கூடவுள்ள நிலையில் இந்த மாநாட்டில் சீன ஜனாதிபதியாக மூன்றாவது முறையாகவும் ஜி ஜின்பிங் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த மாநாட்டில் ஜி ஜின் பிங் வாழ்நாள் முழுவதும் சீன ஜனாதிபதியாக பொறுப்பு வகிக்கலாம் என்ற தீர்மானம் இயற்றப்படும் என்று கூறப்படுகிறது. அது உறுதி செய்யப்பட்டால் சீன கம்யூனிஸ்ட் கட்சியை தோற்றுவித்த மாவோ சேதுங்குக்கு அடுத்த படியாக



அத்தகைய அதிகாரம் வழங்கப்படும் தலைவர் என்ற பெருமையை ஜி ஜின்பிங் பெறுவார்.

69 வயதாகும் ஜி ஜின்பிங் கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து சீன ஜனாதிபதியாக பொறுப்பு வகித்து வருகிறார். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் கட்சியின் பொதுச் செயலாளராக ஆனதிலிருந்து, தனது ஆட்சிக்கு தெரிந்த எந்த ஒரு பிரிவு எதிர்ப்பு எழுந்துவிடாதவாறு அதிகாரத்தை ஒருங்கிணைத்துள்ளார்.

கோவிட்-19 தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி, மேற்கத்திய நாடுகளுடன் அதிகரித்து வரும் உரசல்கள் மற்றும் தாய்வான் விவகாரம் ஆகியவற்றால் சில அதிருப்திகள் இருந்தபோதும் அவர் தலைமைப் பதவியில் தொடர்வதற்கான ஆணையைப் பெறுவார் என்றே நம்பப்படுகிறது.

(அ)

# சோவியத் ஒன்றியத்தின் கடைசி தலைவர் மறைவு



மொஸ்கோ, செப். 01

சோவியத் யூனியனின் முன்னாள் அதிபரும் அதன் உடைவுக்குக் காரணமாகிய சீர்திருத்தங்களுக்கு வித்திட்டவருமாகிய மிகைல் கோர்பச்சேவ் தனது 91ஆவது வயதில் காலமானார்.

சிறுநீரக வியாதி உட்பட பல நீண்ட கால நோய்களுக்காகச் சிகிச்சை பெற்று வந்த அவர் மொஸ்கோ மருத்துவமனை ஒன்றில் நேற்று முன் தினம் இரவு உயிரிழந்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், கோர்பச்சேவின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுள்ளார் என்று கிரெம்ளின் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

1985 இல் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் அதிபராகப் பதவிக்கு வந்த கோர்பச்சேவ், பின்னர் சோவியத் ராச்சியம் உடைந்து சிதறிப் பல நாடுகளாகப் பிரிவதைத் தடுக்கவியலாதவராகப் பதவி விலகினார்.

பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்து இன்றைய நவீன ரஷ்யா உருவாகுவதற்கு வித்திட்டவர் என்று மேற்குலக ஊடகங்கள் அவரை வர்ணிக்கின்றன. சோவியத் கம்யூனிஸ்ட கட்சிக்குள் அவர் கொண்டுவந்த பெரஸ்தரோய்கா சீர்திருத்த இயக்கம் நாட்டின் தேசிய அரசுடமை என்ற நிலையில் இருந்த பொருளாதாரத்தை சந்தை முறைமைக்கு மாற்றியமைக்க வழிவகுத்தது. சோவியத் ரஷ்யாவை அது வெளி உலகிற்குத் திறந்து விட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத்தின் செல்வாக்குகளில் இருந்து விடுபட வழி வகுத்தார். அணு ஆயுதக் குறைப்பு உட்பட அமெரிக்காவோடு அவர் செய்து கொண்ட முக்கிய உடன்படிக்கைகள் பனிப் போருக்கு அடியோடு முடிவுகட்ட உதவின. ஆனால் அதி உச்ச வல்லமை மிகுந்த தேசமாக விளங்கிய ஒன்றியத்தை அவரது கொள்கைகள் அமெரிக்காவுக்கு அடிபணியச் செய்துவிட்டன என்று அவரை விமர்சிப்பவர்கள் கூறுகின்றனர்.

சர்வதேச ரீதியில் புகழப்பட்டார். உள்நாட்டில் செல்வாக்கு இழந்தார். 1990 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றார். இன்று மீண்டும் ஒரு பனிப்போரின் தொடக்க கலப் பகுதியில் - ரஷ்யா ஒரு பெரும் யுத்தத்தில் சிக்குண்டுள்ள வேளையில் - இவ்வுலகில் இருந்து விடை பெற்றிருக்கிறார். கோர்பச்சேவின் மறைவுக்கு உலகெங்கும் தலைவர்கள் அவரைப் புகழ்ந்து அஞ்சலிச் செய்திகளை வெளியிட்டிருக்கின்றனர்.

(அ)

# சீன ஆளில்லா விமானங்களை சுட்டு விரட்டியடித்த தாய்வான்!

தாய்பேய், செப். 01

தங்கள் நாட்டு வான் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த சீனாவின் ஆளில்லா விமானங்களை எச்சரிக்கை செய்யும் வகையில் தாய்வான் துப்பாக்கிச் சூடு நடத்தி விரட்டியது.

தாய்வான் கின்மென் தீவுக்கு மேலே நேற்று முன் தினம் 3 ஆளில்லா விமானங்கள் பறந்தன. அவற்றை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனையடுத்து இந்த 3 ஆளில்லா விமானங்களும் மீண்டும் சீனா பகுதிகளை நோக்கிச் சென்று மறைந்ததாக கின்மென் பாதுகாப்புக் கட்டளை தலைமையகம் தெரிவித்துள்ளது.

தாய்வான் தங்கள் நாட்டின் ஒரு பகுதி எனக் கூறி வரும் சீனா, அடிக்கடி தனது விமானங்களை தாய்வான் வான் பாதுகாப்பு எல்லைக்குள் அனுப்பி தாய்வானை எரிச்சலூட்டி வருகிறது. ஆனால் தாங்கள் எந்தவொரு நாட்டின் பகுதியும் இல்லை. சுதந்திரமான தனி நாடு என தாய்வான் கூறி வருகிறது.

இந்த நிலையில் தாய்வானுக்கு அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி அண்மையில் சென்றது பெரும் சர்ச்சையாக வெடித்தது. நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்துக்குப் பின்னர் அந்த பிராந்தியத்தில் சீனா தமது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளது. குறிப்பாக தாய்வான் ஜலசந்தியை சூழ்ந்து சீனா அதி தீவிரமாக போர் ஒத்திகைகளை நடத்தி வருகிறது.

சீனாவின் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு மத்தியில் அமெரிக்காவின் போர்க்கப்பல்களும் தாய்வான் ஜலசந்தியில் முகாமிட்டதால் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே தாய்வானுக்குள் சீனாவின் ஆளில்லா விமானங்கள் அத்துமீறி பறந்தன. இதனையடுத்து எச்சரிக்கை தரும் வகையில் வானை நோக்கி தாய்வான் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.



பிரேசிலின் ஜனாதிபதி தேர்தல்

# முன்னாள் ஜனாதிபதி இனாசியோ முன்னிலை!

பிரேசிலியா, செப். 01

பிரேசிலின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முன்கூட்டிய கருத்துக்கணிப்புகளின்படி முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தற்போதைய ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவை விட வலுவான முன்னிலையை தக்கவைத்துள்ளதாக நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்ட ஜெனியல் ஃ குவாஸ்ட் கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது.

கருத்துக் கணிப்பு முடிவுகளின்படி லூலா 44 வீத ஆதரவைப் பெற்றுள்ளார். போல்சனாரோவின் 32 வீத ஆதரவையே பெற்றுள்ளார். இரண்டு வாரங்களுக்கு முன்பு அவர்கள் முறையே 45 வீதம் மற்றும் 33 வீத ஆதரவைக் கொண்டிருந்தனர்.

மத்திய - இடது வேட்பாளர் சிரோ கோம்ஸின் ஆதரவு முந்தைய கணக்கெடுப்பில் 6 வீதத்தில் இருந்து தற்போது 8 வீதமாக உயர்ந்துள்ளது.

குவாஸ்ட் கருத்துக் கணிப்பு ஓகஸ்ட் 25 முதல் 28 வரையான காலப்பகுதியில் இடம்பெற்றது. இதல் சுமார் 2,000 பேரிடம் கருத்து கேட்கப்பட்டது.

புதிய ஜனாதிபதி , துணை ஜனாதிபதி, ஆளுநர்கள், பிரதிநிதிகள் மற்றும் செனட்டர்களைத் தேர்ந்தெடுக்க பிரேசிலியர்கள் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வாக்களிக்க உள்ளனர். எந்த வேட்பாளரும் தெளிவான வெற்றி பெறவில்லை என்றால் ஒக்ரோபர் 30 ஆம் திகதி இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறும்.

(அ)

# அமெரிக்காவில் முதலாவது குரங்கம்மை மரணம் பதிவு




நியூயோர்க், செப். 01

அமெரிக்காவில் குரங்கம்மை நோயால் முதல் மரணம் நேற்று முன் தினம் பதிவானது. டெக்சாஸ் மாகாணத்தில் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ஒருவர் உயிரிழந்ததாக மாகாண சுகாதார அதிகாரிகள் அறிவித்தனர்.

குரங்கம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் இறப்புகள் ஒப்பீட்டளவில் அரிதானவை. இந்த வைரஸால் பாதிக்கப்பட்டு கண்டறியப்பட்டவர்களில் பெரும்பாலோர் குணமடைந்துள்ளனர்.

இதுவரை குரங்கம்மையால் உலகம் முழுவதும் 15 பேர் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

டெக்சாஸில் உயிரிழந்த நபர், நோயெதிர்ப்பு குறைபாடுள்ள வயது வந்தவர் என்று டெக்சாஸ் மாநில சுகாதார சேவைகள் துறை தெரிவித்துள்ளது.

அந்த நபர் மருத்துவமனையில் உயிரிழந்தார். அடுத்த சில வாரங்களில் பிரேத பரிசோதனை முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நோயாளியின் அடையாளம் வெளியிடப்படவில்லை.

அமெரிக்காவில் இதுவரை 18,101 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டவர்களில் 93 வீதமானவர்கள் ஒரு பால் உறவில் ஈடுபட்ட ஆண்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

கறுப்பினத்தவர்கள் மற்றும் ஹிஸ்பானிக் மக்கள் விகிதாசார அடிப்படையில் அதிகளவில் இந்த வைரஸால் பாதிக்கப்படுவதாக ஆரம்ப தரவுகள் காட்டுகின்றன.

(அ)



## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் ஒசாகா அதிர்ச்சி தோல்வி!

நியூயோர்க், செப். 01

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் பிரபல வீராங்கனையான ஜப்பானின் நயோமி ஒசாகா முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

வருடத்தின் கடைசி கிராண்ட்ஸ்லம் தொடரான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நியூயோர்க்கில் நடக்கிறது.

இதில், நேற்று நடந்த போட்டியில் பிரபல வீராங்கனையான ஜப்பானின் நயோமி ஒசாகா, அமெரிக்காவின் கொலின்ஸ் ஆகியோர் மோதினர்.

தொடக்கம் முதலே கொலின்ஸ் போட்டியில் ஆதிக்கம் செலுத்தினார். இதனால், 7 -6 (7-5), 6 -3 என்ற செற்களில் அவர் வெற்றி பெற்றார்.

அமெரிக்க ஓப்பன் சம்பியனை இரு தடவைகள் வென்ற அவர் இந்தத் தொடரில் முதல் சுற்றிலேயே வெளியேறுவது இதுவே முதல் தடவையாகும். இந்த ஆண்டில் அவர் தொடர்ச்சியாக சறுக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் அசரென்கா, படோஸா வெற்றி!

நியூயோர்க், செப். 01

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் விக்ரோரியா அசரென்கா, சினியாகோவா, படோஸா ஆகிய முன்னணி வீராங்கனைகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

வருடத்தின் கடைசி கிராண்ட்ஸ்லம் தொடரான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில், நேற்று முதல் சுற்றுப் போட்டிகள் நடந்தன.

இதில், அசரென்காவை அமெரிக்காவின் கிரேகேர் எதிர்த்தார். மூன்று செற்கள் நீடித்த இந்தப் போட்டியில் 6 -1 , 4- 6, 6 - 2 என்ற செற்களில் அசரென்கா வென்றார்.

மற்றொரு போட்டியில் ஸ்பெயினின் படோஸா சுரேன்கோவை எதிர்த்து 3-6, 7-6 (7-4), 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல, அமெரிக்காவின் ரௌசென்டை செக் குடியரசின் சினியாகோவா 6- 4, 4-6, 6-2 எனற செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ஐ)

### ஆசிய கிண்ணக் கிரிக்கெட்

# சுப்பர் 4 சுற்றுக்குள் ஆப்கானிஸ்தான்!



சார்ஜா, செப். 01

பங்களாதேஷ் அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்ட ஆப்கானிஸ்தான் முதல் அணியாக சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியது.

சார்ஜாவில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் 128 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 18.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.

இதில், முஜிப் உர் ரஹ்மான், ரஷித் கான் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுகளும் நஜிபுல்லா ஸத்ரானின் அதிரடி துடுப்பாட்டமும் இப்ராஹிம் ஸத்ரானின் நிதானமான துடுப்பாட்டமும் முக்கிய பங்காற்றின.

அதிரடியாக ஓட்டங்களைக் குவித்த நஜிபுல்லா ஸத்ரான் 17 பந்துகளில் 6 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி அடங்கலாக 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். மறுபக்கத்தில் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய இப்ராஹிம் ஸத்ரான் 41 பந்துகளில் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

அவர்கள் இருவரும் 4ஆவது விக்கெட்டுக்காக 33 பந்துகளில் 69 ஓட்டங்களைப் பகிர்ந்து ஆப்கானிஸ்தானின் வெற்றியை இலகுவாக்கினர்.

பங்காதேஷை போன்றே ஆப்கானிஸ்தானுக்கும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. ஆமைவேகத்தில் ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டிருந்த ஆப்கானிஸ்தானின் முதலாவது விக்கெட் 5ஆவது ஓவரின் முதல் பந்தில் வீழ்ந்தபோது அணியின் ஓட்ட எண்ணிக்கை 15ஆக இருந்தது.

ரஹ்மானுல்லா குர்பாஸ் இப் போட்டியில் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஹஸரத்துல்லா ஸஸாய், இப்ராஹிம் ஸத்ரான் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 30 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைக் கட்டியெழுப்ப முயற்சித்தனர்.

ஆனால், ஹஸரத்துல்லா ஸஸாய் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுடன் சொற்ப நேரத்தில் அணித் தலைவர் மொஹமத் நபி 8 ஓட்டங்களுடன் களம் விட்டு வெளியேறினார்.

அதன் பின்னர், ஓட்டங்கள் பெறுவதில் சிரமத்தை எதிர்கொண்ட ஆப்கானிஸ்தான், 16 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை இழந்து 85 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

ஆனால், அடுத்த 2 ஓவர்களில் முறையே 17 ஓட்டங்களையும் 22 ஓட்டங்களையும் குவித்த ஆப்கானிஸ்தான், 19ஆவது ஓவரின் 3ஆவது பந்தில் வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த பங்களாதேஷ் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

6ஆம், 7ஆம் விக்கெட்களில் ஏற்படுத்தப்பட்ட சிறப்பான இணைப்பாட்டங்களே பங்களாதேஷ் சுமாரான மொத்த எண்ணிக்கையைப் பெற உதவியது.

பங்களாதேஷின் முன்வரிசை துடுப்பாட்டம் சிறப்பாக அமையாததுடன் பவர் ப்ளே பூர்த்தி செய்யப்பட்டபோது அந்த அணி 3 விக்கெட்களை இழந்து 23 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

10 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷின் மொத்த எண்ணிக்கை வெறும் 50 ஓட்டங்களாக இருந்ததுடன் 4 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டிருந்தது.

மொஹமது நயீம் (6), அனாமுலல் ஹக் (5), அணித் தலைவர் ஷகீப் அல் ஹசன் (11), முஷ்பிகர் ரஹீம் (1) ஆகிய நால்வரும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர். 11ஆவது ஓவரில் அபிவ் ஹூசைன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த போது மொத்த எண்ணிக்கை 53 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், 6ஆவது விக்கெட்ல் மஹ்முதுல்லாவுடன் 36 ஓட்டங்களையும் 7ஆவது விக்கெட்டில் மெஹெதி ஹசனுடன் 38 ஓட்டங்களையும் மொஸாடெக் ஹூசைன் பகிர்ந்து பங்களாதேஷை கௌரவமான நிலைக்கு கொண்டுவந்தார்.

மஹ்முதுல்லா 25 ஓட்டங்களையும் மெஹெதி ஹசன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் மொசாடெக் ஹூசைன் 31 பந்துகளில் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதி ருந்தார்.

பந்துவீச்சில் முஜீப் உர் ரஹ்மான் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ரஷித் கான் 4 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

## நியூசிலாந்தின் கொலின் ஓய்வை அறிவித்தார்!

வெலிங்டன், செப். 01

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான கொலின் டி கிராண்ட்ஹோம் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

காயம் மற்றும் மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் தொடர்ச்சியாக கிரிக்கெட் போட்டிகள் இருப்பதும் தான் இதற்கு காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

36 வயதான அவர் கடந்த 2012 வாக்கில் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுக வீரராக களம் கண்டார். 29 டெஸ்ட், 45 ஒருநாள் மற்றும் 41 இருபது - 20 போட்டிகளில் அவர் விளையாடி உள்ளார். இதன் மூலம் 2,679 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அனைத்து வடிவங்களையும் சேர்த்து 91 விக்கெட்களை கைப்பற்றி உள்ளார். டெஸ்ட் 2 கிரிக்கெட்டில் சதங்களை பதிவு செய்துள்ளார்.



“நியூசிலாந்து அணிக்காக நான் 2012 முதல் விளையாடி வந்ததில் மகிழ்ச்சி. அந்த வகையில் நான் அதிர்ஷ்டசாலி என நினைக்கிறேன். எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை எண்ணி இந்த நேரத்தில் நான் மகிழ்கிறேன். அதே நேரத்தில் நான் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டிய நேரம் இதுதான் என நினைக்கிறேன். ஓய்வு குறித்து கடந்த சில வாரங்களாக யோசித்து வந்தேன். இப்போது அதில் ஒரு முடிவை எடுத்துள்ளேன்.

காயம் மற்றும் தொடர்ச்சியாக கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருவதுதான் இந்த முடிவை நான் எடுக்கக் காரணம். எனக்கென ஒரு அழகான குடும்பம் உள்ளது. கிரிக்கெட் கரியருக்கு பின்னால் உள்ள எனது எதிர்காலம் குறித்தும் நான் பார்க்க வேண்டி உள்ளது” என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அவர் இருபது - 20 லீக் தொடர்களில் விளையாடுவார். (ஐ)

# காரணமின்றி கைதுசெய்தவர்களை உடனே விடுதலை செய்யவேண்டும்

## சபையில் வலியுறுத்தினார் சஜித்

கொழும்பு, செப். 01

**காரணமின்றி கைதுசெய்யப்பட்டவர்களை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசிடம் வலியுறுத்தினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்திய வண்ணம் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர்கள் பலர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த எதேச்சதிகார செயற்பாடு எதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது என்பதை அரசு உடனடியாக வெளிப்படுத்தவேண்டும்.

ரணில் - ராஜபக்ஷ அரசு, அரச பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்திய வண்ணம் மக்களை எதேச்சதிகார ரீதியாக




கைது செய்து வருகின்றது.

சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு அரசு ஆதரவைக் கோரும் அதேவேளை, எதிர்க்கட்சி அதற்குத் தயாராக இருக்கும் நிலையில், அரசு இத்தகைய போக்கில் ஜனநாயகமற்ற மற்றும் எதேச்சதிகார செயற் பாடுகளில் ஈடுபடும் பட்சத்தில் நாம் எவ்வாறு இதற்கு ஆதரவளிப்பது?" - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார். (அ)

# கைதான மாணவரை சந்தித்த மனித உரிமைப் பிரதிநிதிகள்!

கொழும்பு, செப். 01

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்டவர்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று சந்தித்துள்ளனர்.

"அடக்குமுறையை நிறுத்துவோம்" என்ற தொனிப்பொருளில் பேரணியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டத்தில், பல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புகளும் இணைந்து கொண்டன.

இந்த போராட்டத்தை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தை நடத்தி இருந்தனர். (அ)

# அவசர நிலைமைக்கு முகம் கொடுக்க விமானப்படையினர் தயார் நிலையில்!

கொழும்பு, செப். 01

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால் ஏற்படக் கூடிய அவசர நிலைமைக்கு முகம் கொடுப்பதற்காக இலங்கை விமானப்படை தயார் நிலையில் உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய, இலங்கைக்கு அண்மித்த வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் கனமழை பெய்யவுள்ளதுடன், மண்சரிவு, வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக் கப்பட்டுள்ளது.

எனவே ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு விமானப்படையினர் தயார் நிலையில் இருப்பதாக விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன தெரிவித்துள்ளார்.

மேலும் அனர்த்த நிலைமைகள் குறித்து, விமானப்படையின் விமானங்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அனர்த்தங்கள் ஏற்படும்போது, மக்களை மீட்பதற்கும் நிவாரணங்களை வழங்கவும் விமானப்படையினர் ஹெலிகொப்டர்கள், சிறப்பு பயிற்சிப் பெற்ற விமானப்படையினர் தயார் நிலையில் உள்ளனர் என்றும் அவர் கூறினார். (அ)

# சடலத்தால் 3 ரயில்கள் இடை நடுவே நின்றன!

கொழும்பு, செப். 01

மலையக ரயில் பாதையின் கிதல் எல்ல மற்றும் ஹீல்ஓயா ஆகிய ரயில் நிலையங்களுக்கிடையில் 166 மைல் கல் பகுதியில் காணப்பட்ட சடலமொன்றால் நேற்று 3 ரயில்களின் பயணங்கள் தாமதமாகின.

இதற்கமைய, பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி அதிகாலை 5.55 பயணித்த உடரட்ட மெனிக்கே ரயில் எல்ல ரயில் நிலையத்திலும் கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த இரண்டு தபால் ரயில்கள் ஹப்புத்தளை மற்றும் பண்டாரவளை ஆகிய ரயில் நிலையங்களிலும் இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிகமான நேரம் குறித்த சடலம் அப்புறப் படுத்தப்படும் வரை நிறுத்தி வைக்கப் பட்டன.

அத்துடன் பண்டாரவளை சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி, காலிங்க ஜயசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, செயற்பட்ட எல்ல பொலிஸார் குறித்த சடலம் தொடர்பான விசாரணையை முன்னெடுத்து, பண்டாரவளை பதில் நீதவானிடம் அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பண்டாரவளை பதில் நீதவான் செனவிரத்ன பிரதேச விசாரணையை முன்னெடுத்ததுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக தியதலாவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார்.

இவ்வாறு ரயில் வீதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர் கிதுல்எல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரவு நேர ரயிலில் மோதி இவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (அ)

# அரச ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு

கொழும்பு, செப். 01

அரச ஊழியர்களுக்குவிசேட கொடுப்பனவொன்றை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிக்க அரச நிர்வாக அமைச்சு இணக்கம் வெளியிட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் எரிபொருளுக்கான அதிக செலவு தொடர்பில் அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னவுடன் கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இதன்போது ஐந்து நாட்களும் வேலைக்குச் செல்லும் அரச ஊழியர்களுக்கு விசேட போக்குவரத்துக் கொடுப்பனவை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கத்தின் செயலாளர் சந்தன சூரியராச்சி தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்கள் வங்கிகளில் பெற்ற கடனுக்கான வட்டித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கும் நிவாரணம் வழங்க தலையீடு செய்வதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் உறுதியளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், வாரத்தின் ஐந்து நாட்களும் பணிக்கு சமூகமளிக்கும்போது போக்குவரத்துச் செலவு அதிகமாக காணப்படும் நிலையில், இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடிய போது அதற்கு நல்ல பதிலொன்று கிடைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



## இணைத்...

பின் ஏற்பாட்டில் கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், கோவிந்தன் கருணாகரம், சார்ள்ஸ் நிர்மலநாதன், த. கலையரசன், வினோநோகராதலிங்கம், ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் க. பிறேமசந்திரன் (சுரேஷ்), தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாகக் கையொப்பமிட்டுள்ளனர்.

இதேபோன்று, நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென் கயிலை ஆதினம் - திருகோணமலை, சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், திருகோணமலை ஆயர் வண. கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இமானுவல் மதத் தலைவர்களும் தங்கள் ஒப்பங்களை இட்டுள்ளனர்.

மேலும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வவுனியா சிறுவர் அபிவிருத்தி அமைப்பு, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம், குரலற்றோரின் குரல், வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு சார்பிலும் அவற்றின் பிரதிநிதிகள் ஒப்பமிட்டுள்ளனர். (ஐ)

## இலங்கைக்கு...

இருந்து 300 கோடி டொலர்களை - சுமார் ஒரு இலட்சத்து ஆறு ஆயிரத்து 407 கோடி ரூபாயை கடனாகக் கேட்டுள்ளது.

எனினும், இந்தக் கடன் இணக்கம் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் உடனடியாக பதிலளிக்கவில்லை என றொய்ட்டர்ஸ் செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், திறைசேரியின் செயலாளர் உட்பட இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரை பேச்சு நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## மரண தண்டனை...

வேற்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அறிவித்தார்.

இந்தத் தீர்மானத்தை வலுவற்றதாகக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரித்த போதே சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நிலைப்பாட்டை நீதிமன்றில் அறிவித்தார்.

விஜித் மல்லல்கொட, எல்.ரீ.பி. தெஹிதெனிய மற்றும் முருது பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மரண தண்டனையை மீள அமுல்படுத்துவது தொடர்பில் சட்டமா அதிபர் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை வினவியபோது, "மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு தனது கையொப்பத்தை, இனிமேல் பயன்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். இது தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும்போது, இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை", என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

இந்த மனுக்கள் மீதான விசாரணையைத் தொடர வேண்டிய அவசியம் உள்ளதா என்பது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு நீதியரசர் குழாமின் தலைமை நீதியரசர் விஜித் மலல்கொட மனுதாரரின் சட்டத்தரணிகளுக்கு அறிவித்தார்.

அவர்கள் முன்வைத்த விடயங்களைப் பரிசீலித்த நீதியரசர் குழாம் இந்த மனுக்களை அடுத்த ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி விசாரணைக்காக ஒத்திவைத்தது.

## பீரிஸ், டலஸ்...

மற்றும் அவருக்கு ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு சுயாதீனமாக செயல்படுவதாக அறிவித்துள்ளனர்.

பிரிந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களில் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், பேராசிரியர் சன்ன ஜயசுமண, பேராசிரியர் சரித ஹேரத், கலாநிதி நாலககொடஹேவா, கலாநிதி குணபால ரத்னசேகர, மருத்துவர் உபுல் கலப்பதி, மருத்துவர் திலக் ராஜபக்ஷ, சட்டத்தரணி டிலான் பெரேரா, சட்டத்தரணி உதயன கிரிந்திகொட, சட்டத்தரணி வசந்த யாப்பா பண்டார, கே. பி. எஸ். குமாரசிறி, லலித் எல்லாவல ஆகியோர் அடங்குவர்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடிய போது சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சபையில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார்.

தமது அணி ஏன் இவ்வாறானதொரு முடிவை எடுத்தது, அதற்கான காரணங்கள் எவை என்பன உள்ளிட்ட விடயங்களை இதன்போது அவர் விவரித்தார். விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தினார். அத்துடன், சுயாதீனமாக செயல்பட முடிவெடுத்துள்ள மொட்டு கட்சி எம். பிக்களின் பெயர் பட்டியலையும் வெளியிட்டார்.

முன்னதாக, ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ விலகிய பின்னர் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் டலஸ் அழகப்பெரும போட்டியிட்டார். இதனால் மொட்டு கட்சி இரண்டாக பிளவுபட்டது.

அந்தக் கட்சி அரசாங்கம் அமைத்த பின்னர் ஏற்பட்ட இரண்டாவது பிளவு இதுவாகும். முன்னதாக, பொதுஜன பெரமுன கட்சியின் பங்காளிக் கட்சிகள் சுயாதீனமாக செயல்பட ஆரம்பித்தன. இந்நிலையில், பீரிஸ் தலைமையிலான தற்போதைய அணியின் பிரிவும் அரசாங்கத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## உச்சத்தில்...

காணப்பட்டிருந்த நிலையிலேயே ஓகஸ்டில் 64.3 வீதமாக உயர்ந்துள்ளது.

இதேசமயம், கடந்த ஜூலையில் 90.9 வீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் ஓகஸ்டில் 93.7வீதமாகவும் ஜூலையில் 46.5 வீதமாக இருந்த உணவு அல்லாத பணவீக்கம் 50.2 வீதமாகவும் அதிகரித்துள்ளது என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் பணவீக்கம் இந்தளவுக்கு உயர்ந்திருப்பது இதுவே முதல் தடவையாகும். அத்துடன், பணவீக்கம் தொடர்ச்சியாக அதிகரிப்பது நாட்டில் பொருட்களின் விலைகளை மேலும் அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தீவிர அரசியலுக்கு திரும்புகிறார் மகிந்த?



கொழும்பு, செப். 01

முன்னாள் ஜனாதிபதி பிரதமர் மீண்டும் தீவிர அரசியலுக்கு திரும்பவுள்ளார் என்று தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பிரதமர் பதவியிலிருந்து விலகிய பின்னர் - சுமார் 4 மாதங்களின் பின்னர் நேற்றைய தினம் மகிந்த ராஜபக்ஷ சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்துக்கு சென்றிருந்தார். அங்கு, கட்சியின் மாவட்டத் தலை வர்களையும் இணை அமைப்புகளையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்தார்.

நேற்றைய தினம் சிறீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் தவிசாளராக செயல்பட்ட ஜீ. எல். பீரிஸ் சுயாதீனமாக செயல்படுவதாகக் கூறி வெளியேறினார். கட்சி தலைமையகத்தின் முக்கிய பணிகளை அவரே பார்த்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமைதி போராட்டங்களை ஒடுக்குவதை நிறுத்துங்கள்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்!

நியூயோர்க், செப். 01

பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் அமைதி வழி போராட்டக்காரர்களை ஒடுக்குவதை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவுடன் ஜூலை 21 ஆம் திகதி புதிய ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர், இலங்கை மக்கள் ஒன்றுகூடுவதற்கும் கருத்துகளை வெளியிடுவதற்கும் உள்ள உரிமைகள் நசுக்கப்பட்டுள்ளன என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஒரு மாத காலமாக அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி, போராட்டக்காரர்களை வன்முறையால் ஒடுக்கி, கைது செய்து வருகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, மக்களின் உரிமைகளை பாதுகாக்க புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்ற வாக்குறுதி தொடர்ந்து மீறப்பட்டு வருவதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## திருமலை...

நேற்று தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையிடம் இந்த உறுதி மொழியை அளித்துள்ளதாக அவர் புதுடில்லியில் வைத்து குறிப்பிட்டுள்ளார்.

கடந்த எட்டு அல்லது ஒன்பது மாதங்களில் ஒவ்வொரு திருப்பத்திலும் இந்தியா உண்மையில் இலங்கைக்கு ஆதரவளித்துள்ளது. இந்தியா இல்லையென்றால் இலங்கை கடுமையான பிரச்னையை எதிர்நோக்கியிருக்கும்.

எனவே, இலங்கையர்கள் இந்தியாவுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இந்தியா 380 கோடி டொலர் மதிப்பிலான உதவிகளை இலங்கைக்கு வழங்கியது.

எனினும், இலங்கைக்கு கடினமான காலங்கள் இன்னும் முடிவடையவில்லை. இதேவேளை திருகோணமலை எண்ணெய் பண்ணைக்கும் இந்திய பக்கத்துக்கும் இடையே எரிசக்தி குழாய் அமைப்பது குறித்து இரு நாடுகளும் விவாதிக்கப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## 20 கோடி...

பட்டது.

பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் உணவுப் பாதுகாப்பை அதிகரிக்கவும் இந்தக் கடன் பயன்படுத்தப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. (ஐ)

## டலஸ் அணி...

சிக்கு தாக்கம் இல்லை.

தவிசாளர் எனக் கூறிக்கொள்ளும் பீரிஸ் ஓரங்கட்டப்பட்டுள்ளார். அவர் எமது கட்சி செயற்பாட்டில் பங்கேற்பதில்லை. விரைவில் கட்சி சம்மேளனம் நடைபெறும். அதன்போது இவர்கள் நீக்கப்படுவார்கள்." - எனவும் எஸ்.பி. குறிப்பிட்டார். (அ)

## சர்வதேச...

இலங்கை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளது. எனவே, மேலும் கால அவகாசங்களை வழங்குவது அர்த்தமற்றது.

ஐ. நா. பாதுகாப்பு சபையில் சீனா தனது "வீற்றோ" அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தும் என்ற வாதம் குற்றவாளிகளை தப்பிக்க வைக்கும் முயற்சியா என்று உலகின் பல தரப்பினரும் சந்தேகத்தை எழுப்புகின்றனர்.

இந்தக் கருத்துக்கள் ஆதரமற்றவை. இலங்கையை விட சீனாவோடு மிக நெருக்கமாக இருந்த சூடான் நாட்டை ஐ. நா. பாதுகாப்பு சபை ஊடாக மனித உரிமைகள் மீறல்களுக்காக ஐ. சி. சியில் பாரப்படுத்தியபோது அதற்கு எதிராக எந்தநாடும் வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. இதேபோன்று வடகொரியாவையும் ஐ. சி. சியில் பாரப்படுத்துவதற்கான விடயமும் ஐ. நா. பாதுகாப்பு சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு இழைக்கப்பட்ட போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் அட்டூழிய குற்றங்களுக்காக நீண்டகாலமாக தமிழ் மக்கள் கோரி நிற்கும் நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு மனித உரிமைகள் பேரவை மேற்குறிப்பிட்ட உண்மைகளின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்துவதற்கு பாதுகாப்புச் சபையை தூண்டுவதற்கான பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் - என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாதத் தடைச் சட்ட தாக்கம் ஜெனிவா தொடரில் எதிரொலிக்கும்!

## ஜனாதிபதியை எச்சரிக்கிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, செப் . 01

**“பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என வலியுறுத்திவந்த ரணில் விக்கிரமசிங்க, தற்போது அதே சட்டத்தை கையில் எடுத்துள்ளார். போராட்டக்காரர்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தப்படுகின்றது. இதன் தாக்கம் ஜெனிவா தொடரில் எதிரொலிக்கும்.”**

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இடைக்கால வரவு-செலவு திட்டம்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காகத்தின் கூட்டில்தான் குயில் முட்டையிடும். சிறிதாக இருக்கும் போது, குயிலும் காகம்போல இருக்கும். வளர, வளரதான் பிரச்னை ஆரம்பமாகும். குயில் விரட்டியடிக்கப்படும்.



மொட்டு கட்சி ஆட்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள பாதீடும், காகத்தின் கூட்டியில் குயில் முட்டை கதைபோல்தான். பாரிய ஆபத்து காத்திருக்கின்றது.

தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே மொட்டு கட்சி ஜனாதிபதியை பயன்படுத்துகின்றது. அவரின் சில திட்டங்களுக்கும் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால் தருணம்வரும்போது வேலையைக் காட்டுவார்கள்.

நாட்டு பொருளாதாரத்தை ராஜபக்ஷக்கள் சீரழித்துவிட்டனர். ஒருவரிடம் ஒரு லட்சம் சேமிப்பு இருந்தால் அதன் தற்போதைய பெறுமதி 30 ஆயிரம் ரூபாதான். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கைதியாகவே ஜனாதிபதி இருக்கின்றார்-என்றார். (அ)

# வரவு-செலவுத்திட்டம் குறித்து தமிழ்க் கூட்டமைப்பு அதிருப்தி

கொழும்பு, செப். 01

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது செலவினங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் வற் வரி அதிகரிப்பு அனைத்துத் தரப்பினரையும் பாதிக்கும் என்பதுடன், மக்களுக்காக அறிவிக்கப்பட்ட நிவாரணங்களும் இந்த வரி அதிகரிப்பினூடாகக் கிடைக்காது போகலாம் என்றும் சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# ஆறு மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு திட்டம்

கொழும்பு, செப். 01

டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் ஆறு மாவட்டங்களில் நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தீர்மானித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்தறை, கண்டி, இரத்தினபுரி மற்றும் கேகாலை. இன்று முதல் வரும் சனிக்கிழமை வரை இந்த வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளன.

இது 60 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கியதாக நடைமுறைப்படுத்தப்படும்.

கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து, சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறு, சுகாதாரத் துறையினர் பொதுமக்களை கேட்டுள்ளனர். (அ)



# அனலைதீவு போக்குவரத்து சேவை; புதிய இ. போ. ச. பேருந்து இணைப்பு

யாழ்ப்பாணம், செப். 01

அனலைதீவு பொது அமைப்புகளின் வேண்டுகோளுக்கு அமைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் புதிய பேருந்து ஒன்று போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை, ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தலைவர் ஜெயகாந்தன் ஊடாக கடந்த 19ஆம் திகதி சந்தித்து தமது பிரதேசத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாகத் தெரிவித்தனர்.

இதன்போது, அனலைதீவில் மக்களின் போக்குவரத்துக்காக பாவனையில் இருக்கும் இ. போ. ச. பேருந்து பழுதடைந்து காணப்படுகின்றது. இதனால், மருத்துவமனைக்கு செல்பவர்கள் வயதானவர்கள் மற்றும் கர்ப்பவதி தாய்மார்கள் போக்குவரத்தில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, புதிதாக ஒரு பேருந்தை சேவையில் ஈடுபடுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடபிராந்திய போக்குவரத்து சபையின் பிரதான முகாமையாளர் குணபாலசெல்வத்துடன் கலந்துரையாடினார்.

இதன் பிரகாரம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண சாலையால் புதிய பேருந்து ஒன்று அனலைதீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தப் பேருந்து கடற்படையினரின் உதவியுடன் அனலைதீவை சென்றடைந்ததுடன், நேற்றைய தினமே போக்குவரத்து சேவையையும் தொடங்கியது. (ஐ)

# கைதான பல்கலை மாணவருக்கு எதிராக பயங்கரவாதச்சட்டம் பயன்படுத்தப்படாது

## பிரதமர் தினேஷ் குணவர்தன உறுதிமொழி

கொழும்பு, செப். 01

“கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது, சாதாரண சட்டமே பயன்படுத்தப்படும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.” - என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

“அமைதியான வழியில் போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 25 பல்கலைக்கழக மாணவர்கள்



நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். அரசின் இந்த ஏதேச்சதிகார செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

போராட்டம் நடத்தும் உரிமை அனைவருக்கும் உள்ளது. அதனை ஒடுக்க முற்படுவது ஜனநாயக விரோதச்செயலாகும். கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தும் திட்டம் உள்ளதா?” என சஜித் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர்,

“அடிப்படை உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளை எமது அரசாங்கம் பாதுகாக்கும். உரிமை என்பது அனைவருக்கும் பொதுவானது. தனி நபருக்குரிய உரிமை, ஏனையவர்களின் உரிமையை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். கைது செய்யப்பட்ட மாணவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது, சாதாரண சட்டமே பயன்படுத்தப்படும். ”-என்றார். (அ)

# தேர்தலை ஒத்திப்போட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம்

## அரசுக்கு ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

கொழும்பு, செப். 01

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்த அவர், மாகாணசபைத் தேர்தலைப் போன்று உள்ளூராட்சி தேர்தலையும் ஒத்திவைக்கவேண்டாம் என கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடைக்கால அரசாங்கம் இடைக்காலமாக உருவாக்கப்பட்டதால் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு அரசாங்கம் பொதுத் தேர்தலுக்கும் செல்ல வேண்டும்.

முன்னதாக வாக்குறுதியளித்தபடி இடைக்கால தேர்தல் முடிந்து



விரைவில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். அரசியலமைப்பின் படி மக்களுக்கு இறையாண்மை உள்ளது. மக்களின் தேர்தல் உரிமையை யாராலும் நசுக்க முடியாது.

ஜனநாயக அமைப்பின் அடிப்படையாக இருந்த வாக்காளர்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் பலவீனமடைந்து ஆபத்தில் உள்ளது. அது நிலைநாட்டப்பட வேண்டும்.

அரசாங்கம் ஆணைக்கு முரணாக செயற்படுகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளும் அரசாங்கத்தின் செயற்பாடுகளும் முரணாக உள்ளன.

நாங்கள் விரும்பியதைச் செய்வதற்கான ஆணையை நாங்கள் ஒருபோதும் நாடவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற வகையில் நாங்கள் ஒரு திட்டவட்டமான வேலைத்திட்டத்தை மக்கள் முன் வைத்தோம். அது பெரும்பான்மையான மக்களால் அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், நாங்கள் சொன்னதும் இன்று செய்வதும் வேறு. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அபிலாஷைகள் தற்போது முற்றாக சிதைந்து விட்டன- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் -யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்- சமுர்த்தி உத்தியோகஸ்தர்



7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- அகவான் தேவி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-தேஜாவு



**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- தொழில் நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவ ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு